# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 3 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 12**
**DECEMBER 2019 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**
Mob.: No. **9894261333** இந்த எண். **SMS** உபயோகத்துக்காக மட்டும்
✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பான வாசகர் குடும்பங்களுக்கு,

உலகிலுள்ள எல்லா மக்களும் பாவ மன்னிப்பு பெற்று பரலோக பாக்கியம் பெற்றிட **மனிதனாக பிறந்து** உபதேசித்து வாழ்ந்துகாட்டி மரித்து உயிர்தெழுந்து, இப்போதும் நம்மோடு நமக்குள் இம்மானுவேலாக வாழ்ந்துகொண்டிருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நானும் என் குடும்பமும் உங்களை வாழ்த்துகிறோம்.

டிசம்பர் மாதம் 25ம் தேதி கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடாமல் கிறிஸ்து நமக்காக மரிக்கவேண்டி பிறந்த அந்த தியாக காரணத்தை நினைவு கூர்ந்து சந்தோஷத்தோடு எல்லா நாளும் எல்லா நிமிடமும் துதிக்கும் கிறிஸ்தவர்களாக வாழ்வோம். **புறமதத்தினருக்கு கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகளை அனுப்பாதீர்கள்.** கிறிஸ்து பிறந்ததை நினைத்து மனம் திரும்பின கிறிஸ்தவர்களால்தான் கிறிஸ்து பறந்த கரணத்தை உணர்ந்து நன்றியுடன் துதித்து சந்தோஷப்பட முடியும்.

இயேசுவை ஏற்றுக்கொள்ளாத புறமதஸ்தவருக்கு **கிறிஸ்து பிறப்பின்** உண்மை காரணத்தை யாரும் அறிவிக்காது அவர்கள் விளங்கிக்கொள்ள இயலாது. **ஆனால் புதுவருட வாழ்த்துக்களை** எல்லாருடனும் பகிர்ந்து சந்தோஷிக்கலாம். வாழ்த்து அட்டைகள் அனுப்பலாம், அது பிழையில்லை.

மேலும் இயேசுவை ஏற்றுக்கொள்ள விரும்பாத **புற மதத்தினரை** கிறிஸ்துமஸ் விருந்து என்று கூறி விருந்துக்கு அவர்களை அழைக்கக்கூடாது. நீங்கள் உண்மையான கிறிஸ்தவராக இருந்தால் உங்களுக்கு **எல்லா நாளும் கிறிஸ்து பிறப்பு நாளாக** நினைத்து சந்தோஷத்தை அனுபவிக்கலாமே ! ஆனால் அந்த சந்தோஷம் மற்றவர்களுக்கு விளங்காது,

# DECEMBER - 2019

ஒருவேளை நட்பின் காரணமாக மனித தயவு கிடைக்கவேண்டி அவர்களை சந்தோஷப்படுத்த நீங்கள் கிறிஸ்துமஸ் விருந்துக்கு புற மதத்தினரை அழைத்தால் பிதிலுக்கு அவர்களின் அர்த்தமில்லாத அவர்களின் விக்கிரக தெயவங்களின் பண்டிகைக்கு உங்களை அழைப்பார்கள். (உதாரணமாக) **தீபாவளிக்கு** அவர்கள் உங்களை அழைத்தால் நீங்கள் அவர்கள் விருந்தில் பதிலுக்கு பதில் அவர்கள் வீட்டுக்கு சென்று அவர்களின் விருந்தில் போய் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ! இயேசுவின் உபதேசத்தை கைக்கொண்டு **சாட்சியுடன் வாழ விரும்புபவர்கள்** மட்டும் நான் மேலே கூறியதை ஒத்துக்கொள்வார்கள்.

நரகாசூரன் என்ற ராட்சதனை **கொல்வதற்காக** அவர்கள் தெய்வம் விசேஷ அவதாரம் எடுத்துககொன்றதாகவும், அவனை கொன்ற அந்த நாளை இந்துமத மக்கள் பட்டாசு வெடித்து விருந்துவைத்து சந்தேஷமாக கொண்டாட வேண்டும் என்பது அவர்களின் கதை.

ஆனால் நம் தெய்வமாகிய **இயேசு கிறிஸ்து** அந்த **கொலைகாரனையும்** தன் இரத்தத்தால் **கழுவி மன்னித்து** தன்னோடு அவனையும் பரலோகம் கூட்டி செல்ல விரும்புகிறார் என்பது தான் நம் தெய்வத்தின் சிறப்பு

**மனுஷனுடைய ஜீவனை** அழிக்கிறதற்கு அல்ல. **இரட்சிக்கவே** மனுஷகுமாரன் (உலகிற்கு) வந்தார். லூ. 9:56 இந்த வசனத்தின் அடிப்படையில் தீபாவளி என்ற அந்த தவறான அர்த்தமில்லாத பண்டிகையில் அவர்களின் சந்தோஷத்தில் நமக்கு பங்கு இருக்கக்கூடாது.

## இம்மாத சிந்தனைக்கு

பேதுரு இயேசுவை நோக்கி "நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மை பின்பற்றினோமே **எங்களுக்கு என்ன கிடைக்கும்?** " என்றான். (மத். 19:27)

**எங்களுக்கு என்ன கிடைக்கும்?** என்ற கேள்வி இன்று பெரும்பாலான ஆவிக்குரிய கிறிஸ்தவர்களும் கேட்கும் கேள்வியாக இருக்கிறது.

நாம் இயேசு கிறிஸ்துவை ஆராதிப்பதற்கும் கிறிஸ்தவராக வாழ்வதற்கும் ஏதோ ஒன்றை கடவுளிடமிருந்து எதிர்பார்ப்பது போல சிலருடைய நோக்கம் அமைகிறது. நான் விக்கிரகத்தைவிட்டு இயேசுவை தெய்வமாக ஆராதித்தால் **எங்களுக்கு என்ன கிடைக்கும் ?** இது புற மதத்தினர் கேட்கும் கேள்வி ! ஆனால் உண்மை கிறிஸ்தவர்கள் அப்படி எதிர்பார்க்கலாமா ?

நான் மிஷனரி பணிக்கு இத்தனை லட்சம் காணிக்கை கொடுக்கிறேன். மலை வாசிகளுக்கு ஆலயம் கட்டிக்கொடுக்கிறேன், பதிலுக்கு கர்த்தர் **எனக்கு என்ன செய்வார் ?**

**ஒன்றை எதிர்பார்த்து** கிறிஸ்துவை சேவிப்பது **உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை அல்ல.** நான் ஜெபத்தில் கேட்டது எனக்கு கிடைத்தால் **தொடர்ந்து ஆலயத்துக்கு வருகிறேன்.** என் மகளுக்கு, மகனுக்கு திருமணம் நடந்தால் **இத்தனை ரூபாய் காணிக்கை** தருவதாக பொருத்தனை செய்யும் கிறிஸ்தவர்கள் எத்தனை பேர் ! **சாத்தராக்.** மேஷாக் **ஆபெத்நேகோ** போல் **கர்த்தர் எங்களை விடுவிப்பார்** – அடுத்தது அவர்கள் கூறுவதை கவனியுங்கள் எங்கள் **கர்த்தர் எங்களை விடுவிக்காமல் போனாலும்** எங்களை **நெருப்பு சூளையில் போட்டாலும்** விக்கிரகத்தை வணங்கமாட்டோம் என்று கூறிய **விசுவாசம்தான் உண்மையான விசுவாசம்.**

!

**பேதுருவின்** ஊழியத்திலும் **பவுலும் சீலாவும்** கர்த்தருக்கென்று செய்த ஊழியத்திலும் ஊழியம் செய்யும்போது **கைது செய்யப்பட்டு** அவர்களை ஜெயிலில் அடைத்தார்கள். ஜெயிலில் இரவு முழுவதும் அவர்களை தூங்க விடாமல் சாட்டையால் அடித்து சித்திரவதைப்படுத்தினார்கள். அவர்கள் கை–கால்கள் சங்கிலியால் கட்டப்பட்ட அந்த வேதனையான நிலையிலும் ஸ்தோத்திர பாட்டை அவர்கள் இரண்டு பேரும் எப்படி ஜெயிலுக்குள் பாட முடிந்தது ? அவர்களுக்கு **முறுமுறுப்பு** ஏற்படவில்லையே? கர்த்தர்மேல் அவர்கள் **கோப்பப்பட**வில்லையே? உம்முடைய பிள்ளையாகிய நாங்கள் நீங்கள் சொல்லித்தான் உமக்காக ஊழியத்தில் உம்மைப்பற்றி

பிரசங்கித்தோம், அப்படியிருக்க எங்களை கைது செய்தபோதும், சாட்டையில் காரணமில்லாமல் ஜெயிலில் அடிபடும்போதும் ஏன் ஆண்டவரே! **அவர்களை நீர் தடுக்கவில்லை**? என்று அவர்கள் யாரும் ஒரு கேள்வியும் கேட்கவில்லையே! என்ன ஒரு விசுவாசம்.!

ஸ்தோத்திரபாட்டை பாடி முடித்தவுடன் இப்போது **சங்கிலிகள்** தானாக **கழன்று விழுகின்றது,** ஜெயிலின் **பூட்டு தானாக திறக்கிறது**. – இப்போது **ஜெயில் கதவு** தானாக **திறந்து வழிவிடுகிறது**. ஆனால் இவர்கள் இதுதான் நல்ல தருணம் என்று ஓடி தப்பிக்க முயற்சி செய்யவில்லையே! அப்படியே சங்கிலி அவிழ்ந்த இடத்திலேயே **அமர்ந்திருக் கின்றனர்.**

**ஜெயில் அதிகாரி** வரும் வரை காத்திருக்கிறார்கள் அரசாங்க **சட்டத்துக்கு மதிப்பு** கொடுத்த அவர்கள் **அற்புத சீஷர்கள்** ஆகும். அதிகாரி வந்தான், **சாவியில்லாமல்** பூட்டு தானே திறந்து கிடக்கிறது! **ஜெயில் கதவும்** முழுவதுமாக திறந்து கிடக்கிறது.

ஒரு ஜெயில் அதிகாரி **கைதியை தப்பிக்கவிட்டால்** கடுமையான தண்டனை கிடைக்கும். ஆகவே அந்த ஜெயில் அதிகாரி அது பெரும் அவமானத்தை உண்டாக்கும் என்று கருதி **தற்கொலை செய்து சாக முயற்சிக்கிறான்**. உடனே **பவுல்** அவனை தடுத்து நாங்கள் **ஓடி தப்பிக்கவில்லை** என்றும், **பயப்படாதே** என்று கூறி அவனை **ஆறுதல் படுத்த** சங்கிலி **கழன்றது,** பூட்டுதானே **திறந்தது** ஜெயில் கதவு முழுவதுமாய் **திறந்து வழி விட்டது** அத்தனையும் **நாங்கள் ஆராதிக்கும்** எங்கள் தெய்வம் இயேசுகிறிஸ்து செய்த **அற்புதமாகும்** என்று அறிவித்தார்கள்.

அவர்தான் தங்களை கைது செய்யவும் அனுமதித்தார் என்றும். ஜெயில் அதிகாரி **சாட்டைகொண்டு** அடிக்கும்போது **வலியில்லா அற்புதம்** செய்யாமல் அந்த **வலியை தாங்கிக்கொள்ள** உதவி செய்தார் என்றும் கூறி இதுதான் **எங்கள் தெய்வத்தின் நடத்துதல்** என்பதை தங்கள் சாட்சியோடு அந்த அதிகாரிக்கு அறிவித்தார்கள்.

மேலும் நாங்கள் கிறிஸ்துவுக்காய், **காரணமில்லாமல் அடிபட்டது ஏன்**? என்று கடவுளோடு நாங்கள் கேட்க மாட்டோம். **இந்த பாடுகளால் எங்களுக்கு என்ன கிடைக்கும்?** என்றும் நாங்கள் கேட்கமாட்டோம்.

நாம் கர்த்தருக்காக சாட்சியுள்ள ஜீவியம் ஜீவிக்கும்போது **என்ன கிடைக்கும்?** என்ற எதிர்பார்ப்போடு ஜீவிப்பது **உண்மையான கிறிஸ்தவ ஜீவியம் அல்ல.** பிரதிபலன் எதிர்பார்க்காமல் **நஷ்டத்தையும்,** அநியாயத்தையும், **அவமானத்தையும்** சகித்து வாழ்வதில் கிடைக்கும் இன்பம் **சந்தோஷம்** ஒன்று உண்டு. அதை **என்ன கிடைக்கும்?** என்று **எதிர்பார்க்காமல் வாழும் போதுதான்** அந்த **ஆவிக்குரிய சந்தோஷத்தை** ருசிக்க முடியும்.

☐ சீஷர்களிலேயே **தலைவன்** பொருப்பில் உள்ளவன் **பேதுரு.** அதனால்தான் **சபையை கட்டும்** பொருப்பு, **சபையை திறக்கும் சாவி** பேதுருவின் கையில் கர்த்தர் கொடுத்தார்.

இன்றைக்கும் அந்த கிறிஸ்தவ சபையின் பொறுப்பு வகித்த **பேதுருவைபோல** கிறிஸ்தவ சபைகளின் **தலைவர்கள்,** தலைமை நிர்வாகிகள், **பிஷப்மார்கள், மாடரேட்டர்கள்** கையில் சபைகளின் **பெரும் பொருப்பு** கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இவர்களோ ஒரு ஏழைப் பிள்ளைக்கு **கிறிஸ்துவ கல்லூரியில்** ஒரு சீட் கொடுக்க **எங்களுக்கு என்ன கிடைக்கும்?** என்கிறார்கள். **கேட்ட தொகை** கிடைக்காவிட்டால் அவர்கள் அதிக மார்க் எடுத்திருந்தாலும் **பேராசிரியர்கள்**, லெக்சரர் ஆகிய வேலைக்கு அவர்கள் **சீனியாரிட்டி** இருந்தாலும் **படிப்பு தகுதியிருந்தாலும் உங்களுக்கு வேலை கொடுத்தால் எங்ளுக்கு என்ன கிடைக்கும்**? என்கிறார்கள்.

**பள்ளிக்கூடம்** கல்லூரி **எல்லாவற்றிலும்** டையோசிஸ் நிர்வாகிகளுக்கு **லஞ்சம்** கொடுத்தால்தான் காரியம் நடக்கும். ஒரு CSI டையோசிஸ்ஸில் **கல்லூரி லெக்சரர்** போஸ்டிங்க்கு 40 லட்சம் கேட்கிறார்கள், ஆனால் அந்த ஏழை விசுவாசிகளோ **ஒரு லட்சம் பணம்** பெற எதையெல்லாம் நாங்கள் **அடமானம் வைக்க வேண்டிவந்தது** என்பதை நினைக்கவும், அந்த கடனை திரும்ப எப்படி செலுத்துவது என்று நினைக்கும்போது

எங்களுக்கு பயமாக இருக்கிறது, என்று **பிஷப் அவர்களிடம்** குடும்பமாக **நேரில் சென்று** அழுதிருக்கிறார்கள். ஆனால் **பிஷப்** தான் செய்வதற்கு ஒன்றும் இல்லை **எல்லாம் நிர்வாக குழுவின் பொருப்பு** என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டார், மறுபடியும் திரும்ப டையோசிஸ் நிர்வாகிகளிடம் வந்து கெஞ்ஜினார்கள். ஆனால் அவர்களோ அவர்களைப் பார்த்து நீ **கல்லூரியில் சேர்ந்தால்** உனக்கு கிடைக்கும் **பேராசிரியர்** வேலைக்கு மாதம் **1.25 லட்சம்** சுளையாக சம்பளம் கிடைக்குமே ! வருடம் மொத்தம் உனக்கு எவ்வளவு கிடைக்கும் என்று **கணக்குபோட்டு பார்.** 40 லட்சம் ரூபாய் கொடுக்க தயங்குகிறாயே! வருடத்தில் கோடிகள் சம்பாதிப்பாயே ! அப்படியிருக்க 40 லட்சம் கொடுக்க ஏன் தயங்குகிறீர்கள்?

இந்த சம்பவம் உண்மையாக நடந்தது, அந்த பெண்ணுக்கு கல்லூரியில் அந்த வேலை கிடைத்தால் அந்த 40 லட்சத்தில் **பிஷப் அவர்களின் பங்கு** எவ்வளவு என்று அவர்கள் கூறியதை கேட்டபோது நான் அதிர்ந்து போனேன். **இவர்கள் கிறிஸ்தவர்களா?** அரசியல் வாதிகளா? **டையோசிஸ்க்குள்ளும்** லஞ்ஜம் புறையோடு கிடக்கிறது.

☐ கோயமுத்தூர் CSI டையோசிஸ்ஸில் Rt. Rev. தங்கமுத்து என்பவரின் காலத்தில் இப்படிப்பட்ட ஊழல் பிரச்சனைகள் எழவில்லை. கை சுத்தம் உள்ளவராக இருந்தார்.

☐ அதே போல தெற்கு கேரளா டையோசிஸ் பிஷப்பாகவும். CSIன் மாடரேட்டராகவும் பணியாற்றிய The Most Rev. I. ஜேசுதாசன் என்பவரை குறித்து CSIயின் 24 டையோசிஸ்களிலும் அவர் மரிக்கும் வரை மிகப்பெரிய மதிப்பை பெற்றவர். மரித்தபின் தன் குடும்ப வீட்டையே CSI டையோசிஸ் உபயோகத்துக்காக ஒப்படைத்தார்.

☐ அதே சமயம் சமீபத்தில் மாடரேட்டராக பணியாற்றி லஞ்ஜம் வாங்கிய மாடரேட்டர் ஒருவர் நான்கு இடத்தில் பலகோடி மதிப்புள்ள நிலம், வீடு வாங்கி வைத்துள்ளார். இன்றைக்கு யாரும் அவரை எந்த நிகழ்ச்சிக்கும் அழைப்பதில்லை.

☐ வடக்கு கேரளா CSI டையோசிஸ் Rt. Rev. பெஞ்ஜமின் அவர்களும் நல்ல பெயரோடு சாட்சியோடுதான் மரித்தார்.

☐ அப்படியே ஆந்திரா பிஷப் அவர்களும் மிக சாட்சியுடன் இருந்ததால் டையோசிஸ்ஸில் உள்ளவர்கள் தவறு செய்ய முடியாததால் பிஷப்பின் கார் பயணத்தின்போது குடும்பத்தோடு அவர் காரை நெருப்புவைத்து கொன்று போட்டார்கள்.

☐ கர்னாடாகாவிலும் இரண்டு பிஷப்மார் சாட்சியுடன் பணிபுரிகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் பணி புரிந்த அதே CSIயின் பெரும்பான்மையான டையோசிஸ்களில் இப்போது பண ஊழல், காம்ப்ளக்ஸ், வாடகை கடைகள் இப்படிப்பட்ட சொத்துக்களிலிருந்து டையோசிஸ் நிர்வாகிகள் கொள்ளை அடித்ததுபோக மீதிதான் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

☐ ஒரு **ஆயரை** தங்கள் டையோசிஸ்க்கு **பிஷப்பாக** தெரிந்தேடுக்க சில வருடங்களுக்குமுன் அந்த டையோசிஸ்ஸிலிருந்து **சினாட் அலுவலகத்துக்கு** வந்தார்கள். சினாட்டில் உள்ளவர்கள் உங்கள் டையோசிஸ்ஸிலிருந்து இரண்டு பார்ட்டிகள் உங்களுக்கு முன்பே எங்களிடம் வந்து பேரம் பேசிவிட்டு போனார்கள். **நீங்கள் எவ்வளவு கொண்டுவந்திருக்கிறீர்கள்?** பணம் எங்களுக்கல்ல. **சினாட் பொதுவைப்புத் தொகைக்காக** (Fund) கேட்கிறோம். வந்தவர்கள் வெளிப்படையாகவே கொண்டுவந்த தொகை இவ்வளவு 1½ கோடி ரூபாய் என்றார்கள், அதில் **மாடரேட்டர் அவர்கள் தனக்கு எவ்வளவு** என்றாராம் ? அந்த குறிப்பிட்ட டையோசிஸ் நிர்வாகிகளோடு நான் கேட்டேன் எப்படி நீங்கள் இப்படி **பகிரங்கமாக,** கூச்சமில்லாமல் துணிந்து **சினாட் நிர்வாகிகளிடம்** கேட்கிறீர்கள் என்றேன். அவர்கள் ஏக குரலில் மிக **மரியாதை குறைவாக** ஒரு வார்த்தையை கூறி அவன்களோ **வெட்கம், மானம்,** சூடு, சொரனையின்றி **வெளிப்படையாக** மாடரேட்டர் **சார்பில் கேட்கிறோம்** என்று எங்களிடமே கேட்கும்போது இவன்களுக்கு என்ன மரியாதை கொடுக்க வேண்டியிருக்கிறது என்றார்கள்!

(நான் இப்படி **பிஷப் பதவிக்கு** பணம் கொடுத்ததையும் **மாடரேட்டர்** சார்பில் **தனக்கு எவ்வளவு கிடைக்கும்?** என்று கேட்டதையும் **ஜாமக்காரனில்** இப்படி எழுதுவதையும் **வாசித்தால்** எந்த டையோசிஸ் பிஷப் **என்னை** விரும்புவார்கள். குற்றம், **ஊழல் செய்யாத பிஷப்மார் 7 பேர் எனக்கு நன்றாக தெரியும்.** ஆனால் அவர்களும் என்னை விரும்பமாட்டார்கள். இதை எல்லாம்அறிந்துதான் எச்சரிப்பாக ஜெபத்துக்காக, என் வாசகர்களுக்காக எழுதுகிறேன்.

☐ பேதுருவின் ஸ்தானத்தில் பல திருமண்டலங்களை தலைமை ஏற்று நடத்துபவர் , பச்சையாக **எனக்கு என்ன கிடைக்கும்?** என்று அந்த **சினாட் நிர்வாகிகளுடன்** இரகசிமாக கேட்கும்போது **கிறிஸ்தவம்** எங்கே போய்க்கொண்டிருக்கிறது ?

**எங்களுக்கு என்ன கிடைக்கும் ? எங்களுக்கு என்ன கிடைக்கும்** என்ற கிறிஸ்தவ டையோசஸ்களிலிருந்து வரும் சப்தம் **பெருத்த அவமான வார்த்தையாக** காதில் விழுகிறது.

**மேலே** உள்ளவர் முதல் **கீழே** உள்ளவர்கள் வரை **எங்களுக்கு என்ன கிடைக்கும்** என்ற கேள்விதான் எங்கும் கேட்கிறது. இப்பட நான் எழுதுவதால்தான் தவறுசெய்யும் சில டையோசிஸ்கள் என்னை கன்வென்ஷனில் பேச அழைக்க தயங்குகிறது.

☐ கிறிஸ்தவ விசுவாசிகளும் எந்த ஆவிக்குரிய கூட்டங்களுக்கு போனாலும் **அந்த ஊழியர் எனக்காக ஜெபித்தால்** அல்லது **ஜெபத்தில் என் பெயர்** அழைத்தால் **எங்களுக்கு என்ன கிடைக்கும்** ? என்ற எதிர்பார்ப்பில் தான் **ஆவிக்குறிய கூட்டங்களுக்கு** போகிறார்கள். அந்த கூட்டத்தை நடத்தும் அந்த ஸ்டார் **ஊழியர்களும் பொய் விளம்பரத்துக்கு** இவ்வளவு செலவழித்துள்ளோம், **தங்களுக்கு என்ன கிடைக்கும்?** என்று எதிர்பார்பில்தான் கூட்டங்களை நடத்தும் ஊழியர்கள் கூட்டங்களை நடத்துகிறார்கள். பெரும்பாலும் கிறிஸ்தவ மக்கள் **வியாபாரிகளாகிப் போனார்கள்.**

பொதுவாக **கிறிஸ்தவ விசுவாசிகள்** எந்த சபையை சேர்ந்தவர்களானாலும் அத்தனை பேரும் **வியாபாரிகளைப்போல**த்தான் கடவுளிடம் **லாபத்தை எதிர்பார்க்கிறார்கள்** !

மனம் திரும்பி இரட்சிக்கபட்ட விசுவாசிகளும் ஏதோ ஒன்றை கடவுளிடம் எதிர்பார்த்துதான் ஜெபிக்கிறார்கள். **ஏதோ ஒன்றை எதிர்பார்த்துதான்** ஊழியத்துக்கு **வர துடிக்கிறார்கள்.** இவர்களுக்கு **மரணம் வரை** நான் கர்த்தருக்கு உண்மையாக இருப்பது எப்படி? என்ற சிந்தனையும் பயமும் இல்லாமல் போனது.

மரணம் வரை நான் **வீட்டிலும்** வெளியிலும், **ஊழியத்திலும் சாட்சியிழக்காது ஜீவிப்பது எப்படி?** என்ற பயம், ஆசை ஒரு கிறிஸ்தவ விசுவாசிக்கு அல்லது ஊழியர்களுக்கு உண்டாக வேண்டாமா?

☐ ஒரு **வீடு சந்திப்பில்** இந்த குறிப்பிட்ட குடும்பத்தினர் **வீட்டுக்கு போய் ஜெபித்தால் சுமார் எவ்வளவு காணிக்கை கொடுப்பார்கள்?** என்ற **எதிர்பார்ப்போடு** ஜெபிக்கும் **வீடுகளை தெரிந்தெடுக்கிறாளே!** அதை நினைக்கும்போது இவர்கள் எத்தனை **கீழ்தரமான ஊழியர்களாக** இருக்கிறார்களே! **இவர்களை நம்பி** கர்த்தர் என்ன செய்வார் ?

**எங்களுக்கு என்ன கிடைக்கும் ?**

எங்களுக்கு என்ன கிடைக்கும் என்ற அடிப்படையில் உங்கள் **ஜெபம், ஊழியம்,** கிறிஸ்தவ வாழ்க்கை அமைந்துள்ளதா? என்று **வருட கடைசி மாதத்தில்** உள்ள நாம் நம்மை பரிசோதனை செய்து பார்த்து நம்மை சரிபடுத்திக்கொண்டு 2020 **புது வருடத்தில்** காலை வைப்போமா?

நாம் நம் **ஆயர்,** பிஷப், **மாடரேட்டர்,** நம் **சபை** ஆகிய ஒன்றையும் **கவனிக்காமல்** நாம் நம் **ஆத்துமாவை மட்டும் ஜாக்கிறதையாக** பார்த்துக்கொள்வோம், நாம் **யாருக்கு காணிக்கை** அனுப்புகிறோமோ **அந்த ஊழியர்களை கவனிக்காமல்** அவரவர்கள் **சரியான உண்மையான** ஊழியர்களாக இருந்தாலும் அவர்களையும் கவனிக்காமல் **உங்கள்** ஆத்துமாவை

கர்த்தருக்குமுன் குற்றம்மறறதாக இருக்கிறதா என்பதை மட்டும் கவனியுங்கள். **உங்கள் ஆத்துமாவுக்கு நீங்கள்தான் கணக்கு கொடுக்கவேண்டும்,** நீங்கள் உங்கள் மனைவி – கணவன், பெற்றோர், பிள்ளைகளை கூட கவனிக்காமல் உங்கள் தனிப்பட்ட **ஆத்துமா** கர்த்தருக்குமுன் **வேத வசனத்தின்படி** எப்படியிருக்கிறது ? **என்பதை மட்டும் கவனியுங்கள்.**

மற்றவர்களுக்காக **நாம் ஜெபிக்கத்தான்** முடியும் **ஆலோசனை கொடுக்க** முடியும் ஆனால் **மற்றவர்களை மாற்றமுடியாது**! அவரவர் ஆத்துமாவுக்கு அவரவர்கள்தான் கணக்கு கொடுக்கவேண்டும்.

☐ **பவுல்** தன் வாலிப சீஷனாகிய **தீமோதேயுவுக்கு** கூறியதை ஞாபகப்படுத்துறேன்.

1) **விசுவாசிகளுக்கு மாதிரியாக இரு.** 1 தீமோ. 4:12

**அவிசுவாசிகளுக்கு** மாதிரியாக ஜீவிப்பது எளிது ! ஆனால் **விசுவாசிகளுக்கு மாதிரியாக** ஜீவிப்பது மிக கடினம், ஆனால் **என்னை பெலப்படுத்துவது** கிறிஸ்துவாகும் என்று விசுவசியுங்கள். அவர் கிருபையால் மற்ற விசுவாசிகளைவிட ஆவிக்குரிய ஜீவியத்திலும் உயர்வாக ஜீவிக்க உங்களால் முடியும்

2) ஒருவனும் **உன்னை அசட்டை பன்னாதபடிக்கு** நீ **வார்த்தையிலும், நடக்கையிலும்,** அன்பிலும், ஆவியிலும், **விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாக இரு.**

3) **உன்னைக் குறித்தும், உபதேசத்தை குறித்தும்** எச்சரிக்கையாயிரு! இப்போதுள்ள ஏறக்குறைய அனைத்து கிறிஸ்தவ **ஊழியர்களும், வியாபாரிகளாக இருக்கிறார்கள்** அவர்களை தேடிவரும் **விசுவாசிகளும், வியாபாரிகள் போல லாபம் எதிர்பார்க்கிறார்கள்**! ஆகவே **எங்களுக்கு என்ன கிடைக்கும்?** என்று வாசகர்கள் நீங்கள் எதிர்பார்க்காமல் **கிறிஸ்துவை போல** அவர் **சாயலில்** வாழ முயற்சி செய்வோம் !

பவுல் தீமோத்தேயுவுக்கு கூறின கடினமான ஆலோசனை என்ன தெரியுமா? **தீங்குஅனுபவி என்பதாகும்.** யாராவது **இந்த ஆலோசனையை விரும்புவார்களா?**

☐ **கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிக்கிற யாவரும் துன்பம் அனுபவிப்பார்கள்?** (1 தீமோ 3:12) அப்படிப்பட்ட விசுவாசிகள் ஒருபோதும் **எங்களுக்கு என்ன கிடைக்கும்?** என்று தாங்கள் செய்த **ஊழியத்துக்கு** ஆதாயமாக கர்த்தரிடம் **அப்படி கேட்க மாட்டார்கள் கிறிஸ்தவ வாழ்க்கை நிச்சயம் கடினம்தான்** ஆனால் முடிவு இன்பம்.

ஆனால் **கிறிஸ்து** நமக்குள் **நம்மோடு** இருக்கிறாரா என்பதை **உறுதிபடுத்திக்கொண்டால்** போதும். **எந்த சூழ்நிலையிலும்** மனோ ரம்மியமாக இருப்போம். என்று பவுல் கூறுவதை போல **நம்மாலும் கூறமுடியும்,** துன்பத்திலும், **தோல்வியிலும்,** ஏமாற்றத்திலும் **வியாதியிலும்** முறுமுறுக்காத **ஜீவியத்தையும்** அதில் கிடைக்கும் **ஆவிக்குரிய சந்தோஷத்தையும்** வாசகர்கள் அனுபவிக்க நான் தொடர்ந்து உங்களுக்காக ஜெபிப்பேன் என்று இந்த **வருட கடைசியில் உறுதி கூறுகிறேன்.**

நீங்கள் யாவரும் பல வழிகளில் எனக்கு அனுப்பிய காணிக்கை எதுவும் நஷ்டமாகாமல் எனக்கு வந்து சேர்ந்தது, மிக்க நன்றி!

☐டிசம்பர் மாதத்தோடு **அன்னிய பாஷை குழப்பம்** பற்றிய விவரங்களை முடிக்கிறேன். எழுதியதில் **கேள்விகள், சந்தேகங்கள்** இருந்தால் **உடனே தயங்காமல்** எனக்கு எழுதுங்கள் நான் இதுவரை எழுதியவைகளை **புஸ்தக வடிவில்** கொண்டுவரும் முன் உங்கள் சந்தேகங்களுக்கான பதிலையும் அதோடு சேர்த்து திருத்தவேண்டியவை களையும் **சரிபடுத்த வேண்டிய விஷயங்களையும்** சேர்த்து, **புஸ்தகமாக** வெளியிட அது மிக உதவியாக இருக்கும்.

– டாக்டர் **புஷ்பராஜ்**

# அன்னிய பாஷை குழப்பம் 4

## ஜாமக்காரன் வெளியீடு

வெளியிடுபவர் **Dr. புஷ்பராஜ்**
சேலம் -5, தமிழ்நாடு



**ஸ்தாபகர்-ஆசிரியர்**

கடந்த மூன்று பாகங்களிலும் பாஷை என்றால் என்ன ?

கற்கால மனிதர்கள் எப்படி **ஒலி** மூலமாகவும், **செய்கைகள்** மூலமாகவும் ஒருவருக்கொருவர் பேசி பழகினார்கள். அதன் **பரினாம வளர்ச்சியாக** மொழி என்றும் பாஷை என்றும் சம்பாஷனைகள் வளர்ந்தது என்று **உலக வரலாறுகள்** மூலமாக **படிப்பு அறிவிலே உள்ள** விவரங்களை ஜாமக்காரனல் நான் எழுதியதை நீங்கள் வாசித்தீர்கள்,

ஆனால் நம் வேத புஸ்தகத்தில் மேலே வாசித்த விவரங்கள் எழுதப்படவில்லை, நேரிடையாக கர்த்தரின் படைப்பிலிருந்தும் சிருஷ்டிப்பிலிருந்தும் **ஆதாம் – ஏவாள்** என்ற **முதல் மனிதர்களைப்பற்றியும்** எழுதப்பட்டதை பார்க்கிறோம்.

**ஏதேன்** தோட்டத்தில் ஆண்டவர் எந்த **மொழியில்** பேசினார். ஆதாம்–ஏவாள் அதற்கு எப்படி பதில் அளித்தார்கள். அது என்ன **மொழி** என்பதற்கு விளக்கம் வேதத்தில் இல்லை. ஆனால் ஏதேன் தோட்டத்தில் **கர்த்தரும்** முதல் **மனிதர்களும்** பேசிய **மொழியே** வழக்க மொழியாயிற்று. அதன்பின் முதல் தம்பதிகள் மூலமாக மனித பெருக்கம் உண்டானதையும் அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டதையும் அது **எபிரேய மொழி** என்பதையும் அறியமுடிகிறது. அன்று உலகம் முழுவதிலும் வாழ்ந்த மக்கள் ஒரே மொழி என்பதையும் அறியமுடிகிறது. உலகம் முழுவதும் **ஒரே மொழி** மட்டுமே உபயோகத்தில் இருந்தது என்று வேதமும் தெளிவாக கூறுகிறதையும் அறிந்தோம். **பாபேல் கோபுரம் – தேவ கோபம்** அதனால் **பல மொழிகளை** கர்த்தரே உருவாக்கி அதனால் அந்த மக்கள் பூமியன் எல்லையெங்கும் சிதறி போய் ஜீவித்தார்கள் என்பதையும் எழுதினேன்.

கர்த்தரின் அன்பை மக்கள் இன்னும் விளங்கிக்கொள்ளாமல் கர்த்தரை கோபப்படுத்தும் விதத்தில் பலவித **விக்கிரகங்களை** வடிவமைத்து அவைகள் தங்களை வழி நடத்தும் தெய்வமாக ஆராதித்துக் கொண்டிருந்த காலத்தில் அந்த விக்கிரக வணக்க கூட்டத்திலிருந்து நேர்மையாளனான **ஆபிரகாம்** என்பவனின் குடும்பத்தை மட்டும் அவர்களைவிட்டு பிரிந்து வரச்சொன்னார். ஆபிரகாமும் தன்னோடு பேசின **தெய்வ வாக்கை** விசுவாசித்தவனாக தன் பெரும் சொத்துக்களையும், வீட்டையும், குடும்பத்தையும்விட்டு வெளியே வந்தான். கர்த்தர் அவனை நோக்கி வா நான் உன்னை **பெரிய ஜாதியாக்குவேன்** என்று கர்த்தர் ஆபிரகாமோடு பேசியதை அவன் நம்பி அப்படியே வெறும் கையனாக கர்த்தர் அழைத்த தேசத்துக்கு **ஆபிரகாம் தன் குடும்பத்தை மட்டும்** அழைத்துக்கொண்டு புறப்பட்டார். (ஆதி. 12:1,2) கர்த்தர் அவனுக்கு வாக்களித்தபடி கர்த்தர் அவனை மிகப்பெரிய பணக்காரனாகவும் மிகப்பெரிய ஜாதியாகவும் பெருக பண்ணினார்.

அப்படியே நோவா, ஏனோக், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்ற நபர்களை கர்த்தர் மக்களுக்கு **முன்மாதிரியாக** வைத்து அவர்களிடம் தான் காண்பித்த **அன்பை** மற்ற மக்கள் நேரில் கண்டும் அந்த மக்கள் **விக்கிரக வணக்கத்தை** விடவில்லை அவர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் தாக்கி தங்கள் இஷ்டம்போல் **அவனவன் தன் மனம் போன போக்கில் ஜீவித்தார்கள்.** என்று வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.


இவர்களை மத்தியஸ்தம்செய்து கர்த்தரின் வழியில் வழிநடத்த **நியாதிபதிகளையும், இராஜாக்களையும்** முடிவாக **தீர்க்கதரிசிகள்** மூலமாகவும் எச்சரித்து கர்த்தர் தன் அன்பை தன் மக்களுக்கு விளங்கவைக்க முயன்றார். ஆனால் வணங்கா கழுத்துள்ள அந்த மக்களுக்காக கர்த்தர் **தம் அன்பை** வெளிப்படுத்த கர்த்தர் **தன்னையே பலியாக** கொடுத்து சிலுவையில் அறையப்பட்டு மரித்து அதன் மூலம் **தம் அன்பை** மக்களுக்கு வெளிப் படுத்தினார். அவர் **சிந்திய இரத்ததால்** கழுவப்பட்டு அவர் உபதேசத்தை பின்பற்றினால் **யோவேல்** தீர்க்கன் மூலமாக கூறப்பட்டபடி அவர்களில் மனம் திரும்பி இரட்சிக்கபட்ட **மாம்சமான யாவர் மேலும்** என் ஆவியை **ஊற்றுவேன்** என்ற வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார்.

மேலே எழுதியதுதான் **முழு வேதாமத்தின் சுருக்கம்** இந்த அடிப்படையில் பெற்றுக்கொண்ட **பரிசுத்த ஆவியானவரின் நிறைவில் காணவேண்டிய வெளி அடையாளத்ல்தான்** இன்றைய **பெந்தேகோஸ்தே** என்ற பெயரில் இயங்கும் சபைகளும் மற்ற சபை விசுவாசிகளும் குழம்பியிருக்கிறார்கள். ஆவியானவர் நிறைவுக்கு **வெளி அடையாளம் அன்னிய பாஷையா** என்பது தான் பல வருடங்களாக மற்ற சில கிறிஸ்தவ சபைகளுக்கும் **மாறுபட்ட கருத்துக்கள்** பெருகி பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

இத்தனை பிரச்சனைகளுக்கு காரணம்.....

**பெந்தேகோஸ்தே சபைகளும்** அவர்கள் கூறும் **அன்னிய பாஷைகளுமாகும்**

# பெந்தேகோஸ்தே சபையும் அன்னிய பாஷை பெயரில் உளருதல் உருவான வரலாறு




**அன்னிய பாஷை** பற்றி எழுதப்பட்ட அத்தனை புஸ்தகங்களும் அதை எழுதியவர்கள் அத்தனை பேர்களும் அவரவர்களுக்கு உண்டான சொந்த **அனுபவங்களைத்தான்** அந்த புஸ்தகங்களில் கதை கதையாக எழுதியுள்ளார்களே தவிர அதற்கான **வேத வசன ஆதாரங்களை** அவர்களால் காட்ட முடியவில்லை,

நீதிமன்றத்தில் ஒரு நீதிபதி இப்படி கூறுகிறார். நீ கொலை செய்யவில்லை என்பதை நான் மனதார நம்புகிறேன், ஆனால் அதற்கான ஆதாரம் எங்கே? ஆதாரம் இல்லாமல் நான் ஏன் சுயமாக தீர்ப்பு சொல்ல கூடாதே.! நீ பொய் சொல்லவில்லை ! அன்னிய பாஷையை யாரும் எனக்கு கற்றுக்கொடுக்கவில்லை! என்றும் நானாகத்தான் ஆவியானவரின் உதவியால் அன்னியபாஷை பேசினேன் என்றும் கூறுவதை நான் நம்புகிறேன். ஆனால் அதற்கு **வேத வசன ஆதாரம்** எங்கே? ஏதோ ஒரு சம்பவத்தை அல்லது வசனத்தை மேலோட்டமாய் குறிப்பிட்டு கூறினால் போதாதே அந்த வசனம் கூறிய சூழ்நிலை, அதன் காரணம், பேசியது யார் ? பேசியவர்களின் முன் யார் யார் இருந்தார்கள்! அந்த சூழ்நிலையில் ஏன் அப்படி பேசினார்கள் என்பதை விளக்க வேண்டாமா?

சரி சபையில் எல்லாரும் **அன்னிய பாஷையில்** பேசினார்கள் என்றே வைத்துக்கொள்வோம்! ஆனால் இங்கு தமிழ்நாட்டில் **தமிழ் ஆராதனையில்** உட்கார்ந்து கொண்டு எதற்கு **மற்ற மொழியில்** பேசினார்கள் ?

சரி தனியாக **நீ ஜெபிக்கும்போது** நான் **அன்னிய பாஷையில்** தான் ஜெபிப்பது வழக்கம் என்பாயானால் **ஏன் உனக்கு பைத்தியமா?** நீ ஆராதிக்கும் **தேவனுக்கு உலகின் சகல மொழிகளும்** தெரியுமே? அப்படியிருக்க உன் **தாய் மொழியில்** இரண்டு வார்த்தை கர்த்தரிடம் பேசினாலும் போதுமே! அது உனக்கு எத்தனை நம்பிக்கையும் சமாதானமும் கொடுத்திருக்குமே!

**வசனம்** சக்தியுள்ளது அது கிரியை செய்யாமல் என்னிடம் திரும்பாது என்று கூறிய ஆண்டவர் அந்த **வசனம் என்ற ஞான பாலின் மூலமாகத்தான்** நீ ஆவிக்குரிய ஜீவியத்தில் **பக்தியில்** விருத்தியடைய முடியும் ! **அன்னிய பஷையில்** பக்தி விருத்தி அடைய முடியாதே ! அதை தானே நம் வேதம் போதிக்கிறது. **வசனம்** ஜீவனுள்ளது, **வசனம்** சுகமளிக்கிறது, **வசனம்** கிரியை செய்கிறது. **வசனத்துக்கு கீழ்படிந்தால்** பிதா உன்மேல் அன்பாக இருப்பார் என்று இயேசு உருதியளித்துள்ளார. (யோ. 14:16,24,25) **வசனம்** உன்னை புடமிடுகிறது, **வசனம்** உன்

வாழ்க்கை பாதைக்கு வெளிச்சத்தை கொடுத்து வழி நடத்துகிறது, **வசனத்துக்கு** பயப்படுபவனைத்தான் நான் நோக்கிப்பார்பேன் என்று கர்த்தர் கூறுகிறார் **வசனத்துக்கு** கீழ்படியாதவனுடைய **ஜெபத்தை** கர்த்தர் அறுவருக்கிறார். நீதி 28:9

இப்படியெல்லாம் கர்த்தர் தெளிவாக நமக்காக வசனத்தை குறித்து எழுதி ஆவியானவர் மூலமாக நம்மை உணர்த்தும்போது அர்த்தமில்லாமல் **ஷிரபலா! சங்கரபலா**! என்று இப்படி உளரி ஆவியானவரையே **அவமானப்படுத்துகிறீர்களே!** மேலே குறிப்பிட்டதைபோல் நான்கைந்து வார்த்தைகளை சேர்ந்தாற்போல் பேசுவதை தவிர வேறு ஏதாவது புதுவார்த்தைகள் அர்த்தமுள்ள வார்த்தைகள் நீங்கள் பேசியதுண்டா ? யோசித்து பாருங்கள்!

**சரி நவீன கால அன்னிய பாஷை வரலாற்றை கவனிப்போம்.**

இந்த **வரலாற்றை** நீங்கள் வாசிக்கும் முன் முக்கியமான ஒன்றை கவனிப்போம் இந்த முழு உலகமும் **ஜென்ம பாவத்தில்** விழுந்ததற்கு காரணம் **ஏவாள்** என்ற பெண் என்பதை மறுக்கமாட்டீர்கள் !

மேலும் **பெண்களை** குறித்து வேதம் கூறுவதென்ன பெண்கள் **பெலவீன பாண்டங்கள்** என்பதாகும். இன்றைக்கு **பெந்தேகோஸ்தே சபை,** ஏழாம் நாள் **ஓய்வு நாள்** சபை **யெகோவா சாட்சிகள்** என்ற பிசாசின் சபை இவைகள் எல்லாமே **ஒரு பெண்னால் ஆரம்பித்து** முழு உலகத்தையும் கெடுத்து பயித்தியகாரர்களாக்கிருக்கிறது! பெந்தேகோஸ்தே ஆராதனையில் கலந்து கொள்பவர்கள். ஒரு **இன்பத்தையும்** பெரும் **கவர்ச்சியையும்**, போதை **மயக்கம்** போன்ற மயக்கத்தையும் ஒரு **பரவசத்தையும்** அனுபவித்ததினால் ஆரம்ப காலத்தில் இப்படிப்பட்ட சபைகளில் முதலில் **வாலிப பிள்ளைகள் தான்** இப்படிப்பட்ட ஆராதனையில் கவரப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

☐ 1906 ம் வருடம் **அமெரிக்க நாட்டில் லாஸ் ஏஞ்சல்ஸ்** நகரில் **அசூசா** என்ற பெயரில் ஒரு தெரு இருந்தது. அந்த தெருவில் ஒரு சிறு வீட்டில் ஒரு சிலராக அடிக்கடி கூடி ஜெபிப்பதுண்டு. அந்த வீட்டில் வசிக்கும் **ஜென்னிமூர்** என்ற பெண் தன்வீட்டில் ஜெபிக்கும் அந்த சிறு குழுவில் தானும் சேர்ந்து ஜெபித்துக்கொண்டிருந்தாள்.

இங்கு கவனிக்க வேண்டியது என்னவென்றால் அந்த வீட்டில் கூடிய அனைவருமே (ஒன்று இரண்டு பேரை தவிர) **கருப்பு இனத்தை** சேர்ந்த **ஆப்பிரிக்கர்களாகும்,** பொதுவாக **ஆப்பிரிக்கர்கள்** பிறப்பிலேயே **நடனம் ஆடிக்கொண்டே** பேசுவது, பழகுவது, சந்தோஷம் வந்தால் **பொது இடத்திலேயும்** கைகளைதட்டி நடனம் **ஆட துடங்கிவிடுவார்கள்.** தெருவில் நடக்கும் கருப்பு இனத்தை சேர்ந்தவர்கள் அவர் ஆடுவதைக்கண்டபோது அந்த நடன அசைவில் கவரப்பட்டு கொஞ்சநேரம் தாங்களும் இணைந்து கலந்து கொண்டு ஒரு **சிறு ஆட்டம் ஆடிவிட்டுதான்** தன் வழியே போவார்கள் அது அவர்களின் பிறப்பு **கலாச்சாரம்** ஆகும்.

**Dr.** புஷ்பராஜ் ஆகிய நானும் இரண்டு முறை **ஆப்பிரிக்க** நாடுகளில் **காங்கோ, உகான்டா, நைஜீரியா** போன்ற இன்னும் இரண்டு **ஆப்பிரிக்க நாடுகளில்** 3 வாரங்கள் தங்கி ஊழியம் செய்து திரும்பினேன். ஆகவே அவர்களின் **கலாச்சாரத்தை** நான் நன்கு

அறிவேன்.

**கருப்பு இனத்தவர்** எந்த நாட்டில் சென்று ஆராதித்தாலும் **ஆடாமல்,** கைகளை தட்டாமல் **ஒருவித சப்தமிடாமல்** ஆராதிக்க மாட்டார்கள். அது அவர்களின் **கலாச்சாரத்தில்** காணும் அனுபவமாகும்.

அந்த **அசூசா** தெரு வீட்டு ஜெப கூட்டத்திலும் அன்று அதுதான் நடந்தது. அவர்களின் ஜெபம் **பரவச நிலையடையும்போது** இந்த வாலிப பெண் **ஜென்னிமூர்** அவளும் **பரவசநிலை** அடைய அன்று அவள் **சப்தமாக** ஏதோ கூறி **உளரியிருக்கிறாள்**. இதை பார்த்த மற்றவர்களுக்கு அது புதுமையாக இருந்தது. இந்த **உளரல்** ஆதி அப்போஸ்தல காலத்தில் மேல் அறை அனுபவத்தில் ஒருவரின் வாயில் **பற்பல பாஷைகள்** வெளிவந்தல்லவா ! அதை போல் இவளின் கூச்சல் சப்தத்தில் காணப்படுகிறதே! ஒரு வேளை இதுதான் **பின் மாறி** என்று வேதம் கூறுவதாக இருக்குமோ! என்று விளங்காமல் அவள் இட்ட சப்தத்தை கூடயிருந்தவர்கள் கூடுதல் உற்சாகப் படுத்தினார்கள்.

**ஜென்னிமூர்** என்ற வாலிப பெண் விட்டுக்குமுன் விட்டில் புதிதாக வந்து குடியேரிய நபர் **சகோ. வில்லியம்மோர்** என்பவர். இவர் தன் வீட்டின் நேர் எதிரே உள்ள வீட்டில் உண்டான கூக்குரல் சப்தம் கேட்டு அவர் அங்கு சென்றார். அங்கு நடந்த ஜெப கூட்டத்தை கண்டார். அந்த பெண் **ஜென்னியுடன்** தன்னை அறிமுகப்டுத்திக்கொண்டார். இப்போது அடிக்கடி அந்த பெண் நடத்தும் ஜெப கூட்டத்தில் இவரும் கலந்து கொள்ள ஆரம்பித்தார்.

முதலாவது இந்த **சகோ. வில்லியம்மோர்** அவர்களைப்பற்றி நீங்கள் அறியவேண்டும். இவர் அதே **லாஸ் ஏஞ்ஜல்ஸ்** நகரில் நல்ல **ஆவிக்குரிய சபையில்** விசுவாசியாக இருந்தவர். ஆனால் பள்ளிகூட படிப்பு அதிகம் பயிலாதவர். சாதாரண வேத பாட சாலையிலும் பயிலாதவர். ஆனால் நல்ல ஊழிய வாஞ்ஜை உள்ளவர். தான் இருந்த சபையில் இவர் சபை மூப்பர்களோடு சில கேள்விகள் கேட்க அது பிரச்சனையாகமாறி சபை கமிட்டி அவரை (Ex-Communicate) சபையிலிருந்து நீக்கிவிட்டனர். சபையிலிருந்து வெளியேறிய **வில்லியம்மோர்** மனம் சோர்ந்தவராய் அந்த இடத்திலிருந்து வெளியேறி **அசூசா** தெருவில் வந்து குடியேறினார்.

இந்த சூழ்நிலையில்தான் முன் வீட்டில் உள்ள பெண் **ஜென்னிமூருடன்** நெருங்கி பழக ஆரம்பித்து அவளை காதலித்து திருமணமும் செய்து கொண்டார். இவர் **தன் மனைவின் உளரலை** பெரிதுபடுத்தி மற்ற சபைகளுக்கு **தன் மனைவியை** அறிமுகப்படுத்த **ஜென்னி பேசிய உளரலை அன்னிய பாஷை** என்று விளம்பரபடுத்தினார். அதை கண்டவர் பலர் ஜென்னியைபோல பேசி, பழக ஆரம்பித்தனர், அந்த கூட்டங்களில் பாடல் **வாத்திய கருவிகள்,** டிரம் சப்தம் இவைகளையும் அறிமுகப்படுத்த அங்குள்ள பெரும் கூட்டம் **ஜென்னி** பேசிய அன்னிய பாஷையை தாங்களும் பேசி பழகினார்கள். அந்த செய்தி பக்கத்து நகரங்களுக்கு தீயாய் பரவ **உளரல்** அன்னிய பாஷையாக **மாறி** பல நாடுகளிலும் குறிப்பாக சீனாவிலும் பரவ ஆரம்பித்தது.

இதில் புதுப்புது பரவசத்தின் உச்ச நிலைகளை இவர்கள் படிப்படியாக அடைந்து, ஒரு நிலையில் **அன்னிய பாஷையில் அழ ஆரம்பத்தார்கள்.** ஆண்டவர் அன்னிய பாஷையில் **புதிய சப்தங்களையும்** கொடுத்தார். என்று **லாஸ் ஏஞ்ஜலுக்கு அன்னிய**

**பாஷையும் பெந்தேகோஸ்தே அனுபவமும் எப்படி வந்தது** ? என்ற புஸ்தகத்தை எழுதியவர் குறிப்பிட்டுள்ளார். இதில் **அன்னிய பாஷையில் அழுதால்** ஒரு தனி **இன்பம்** உண்டாகும் என்றும் அன்னிய பாஷையில் **புதிய சப்தங்களும்** எழும் என்றும் அவர் எழுதியுள்ளார்.

நம் இந்தியர்களுக்கு **சுய புத்தியில்லை** என்பார்கள். இந்தியாவில் சபைக்குள் வந்த **எல்லா புது உபதேசங்களும்** இந்தியர்களுக்கு சுயமாக அனுபவப்பட்டதல்ல. எல்லாம் **அமெரிக்க இறக்குமதிதான்,** ஒரு முறை ஒரு ஊழியர் அமெரிக்கா சென்று வந்தால் போதும் அவர் அங்கிருந்து ஒவ்வொரு **புதுபுது உபதேசங்களை** கற்றுக்கொண்டு அவைகளை அவர் **பணத்தோடு** இந்தியாவில் **இறக்குமதி** செய்யலாம்.

**Fr. பெர்க்மன்ஸ்** அவர்கள் இயற்றிய பாட்டையே பாடி பாடி அந்த பாட்டுக்கு அடிமையாகிபோன ஒருவர் திடீர் என்று ஒரு நாள் **Fr. பெர்மன்ஸ்** பாட்டு பாடியபோது எனக்கு அழுகை வரவில்லையே! ஏன் அழுகை வரவில்லை? ஆவியானவர் **என்னை விட்டு** போய்விட்டாரா? என்று கூறி **மனநிலை** பாதிக்கப்பட்டவராய் ஒரு மாதம் **மனநல டாக்டரிடம்** சிகிச்சை செய்து கொண்டார். சிகிச்சைக்கு பின் யாரிடமும் பேசுவது இல்லை. இப்போது மிக அமைதியாகிவிட்டார்.

**Fr.** பெர்கமன்ஸ் அவர்களின் பாடல் நல்ல **கவர்ச்சியுள்ள அர்த்தமுள்ள** பாடல்தான். மேலும் அவர் எழுதிய பாடல் எல்லாம் **ஸ்தோத்திர பாடல்கள்** தான் என்றாலும் எல்லாம் **அழுதுகொண்டே** பாடுவதாவே அந்த இராகம் அமைந்திருக்கும். பொதுவாக **நன்றியும்** ஸ்தேதாத்திரமும் கூறும்போது நமக்கு **சந்தோஷம்தானே** வரவேண்டும்! ஆனால் ஏன் **அழுதுகொண்டு** பாடுவது போல் பாடவேண்டும். அதற்கும் இவர்கள், அது ஒருவித **ஆனந்த கண்ணீர்** என்று இவர்கள் விளக்கம் கொடுப்பார்கள் **!**

இவர் கூட்டத்தில் **பாடல் ஆராதனை** நடத்தும்போது **அன்னிய பாஷையில்** மனம்விட்டு அப்பாவிடம் **அழுங்கள்** என்று ஜெப வேளையில் இவர் கட்டளையிடுவதை கவனித்திருக்கிறேன்.

**ஜென்னி** கூறியதுபோல் **அன்னிய பாஷையில்** வித்தியாசமான **பல்வேறு சப்தங்களை ஆவியானவர்** நமக்கு தருவார் என்று கூறுகிற தவறான உபதேசத்தை ஜாமக்காரனை வாசிக்கிற உங்களுக்கு **பயித்தியமாக** தோன்றவில்லை **!**

அந்த அமெரிக்க பெண்ணான **ஜென்னி** மூலமாக **அன்னிய பாஷை** என்ற பெயரில் உலக முழுவதிலும் பெருமபாலான சபைகளை பிசாசு தன் பிடியில் கட்டி வைத்துவிட்டானே! என்ன பயங்கரம இது !

**அமெரிக்க இறக்குமதி** சரக்கான அந்த **பெண் சொல்லிக்கொடுத்த** அன்னிய பாஷையைத்தான் இன்றைக்கு **AG சபைகள்,** தேவ சபை, **தி பெந்தேகோஸ்தே** (சிலோன் பெந்தேகோஸ்தே) சபைகள் யாவும் **அன்னிய பஷையை தன் சபையின் தனி அடையாளமாக்கிக்கொண்டு** போலி பாஷைகளை பேசி சபை விசுவாசிகளை ஊக்கப்படுத்தியும் வருகின்றன.

**பெந்தேகோஸ்தே சபை** மக்களுக்கும் **சபை பாஸ்டர்களில்** பெரும்பான்மையானவர்களுக்கும் **பெந்தேகோஸ்தே சபைகளுக்கும் இந்த நவீன அன்னிய பாஷை உருவான வரலாறே தெரியாது.**

ஒரு **சாதாரண பெண்** பேசிய உளரலை மையமாக வைத்து அதை **பின்மாறி** என்றும் **ஆதி அப்போஸ்தலர்** பேசிய பாஷை என்றும் இவர்கள் எதை வைத்து நம்பினார்கள் என்றே விளங்கவல்லை!

அந்த அமெரிக்க **சரக்கை** காப்பியடித்து அதை இந்திய **சபைகளில்** அறிமுகம் செய்தார்களே ! அந்த **பாஸ்டர்களை,** அந்த **ஊழியர்களை** கேட்கிறேன். **புதிய ஏற்பாட்டில் ஆதி அப்போஸ்தலர்க்கு** உண்டான பரிசுத்த ஆவியின் அந்த முதல் இறக்கத்தில் அன்று பேசிய பற்பல **பாஷைகள்** (அன்னிய பாஷை) அதன் பின் 1907ம் வருடம் வரை அமெரிக்காவிலும் சரி, இந்தியாவிலும் சரி இங்குள்ள பெந்தேகோஸ்தே சபையினரானாலும் அந்த அன்னிய பாஷை பேசிய வரலாறு உண்டா? **இத்தனை காலம்** அதாவது **1907ம் ஆண்டு வரை** எந்த சபையும் ஏன் அந்த **அன்னிய பாஷையில்** பேசாமல் சபை **ஆராதனை** நடத்தினார்கள்? அந்த இடைப்பட்ட காலத்தில் **ஆவியானவர் எங்கே போயிருந்தார்?** அந்த காலத்தில் 1907 வரை ஒரு ஊழியருக்காவது, ஒரு பாஸ்டருக்காவது **அந்த அனுபவம் உண்டாகாமல் போனது ஏன் ?**

அந்த **ஒரு சாதாரண பெண்,** தன் வீட்டில் **ஜெபிக்க** வந்தவரின் **காதல் வலையில்** விழுந்த **அந்த பெண்,** காதல் மயக்கத்தில் பேசிய அந்த போலியான அன்னிய பாஷையையா **இந்திய பாஸ்டர்கள்** காப்பி அடிப்பது? தானும் குழம்பி **சபை மக்களையும்** குழப்பி அவர்களையும் கெடுத்து **ஒரு கூட்ட கிறிஸ்தவர்களையே** பயித்தியங்களாக உளர வைத்து விட்டனரே !

வாத்திய கருவிகள் கூட இல்லாமல் மிக நன்றாக பாடி ஒழுங்காக ஆவியின் நிறைவில் அமைதியாய் அதுவரை **ஆராதித்திருந்த சபைகளை** ஒரு **பெண்** அந்த சபையின் அமைதியையே கெடுத்து போட்டாரே! போயும் போயும் **ஒரு பெண்ணின் உபதேசத்தையும்** தரிசனத்தையுமா சபை பின்பற்றுவது ?

இந்த அன்னிய பாஷை அனுபவத்துக்கு இவர்கள் **அக்கினி எழுப்புதல்** என்று புது பெயர் வைத்தார்கள். இந்த **அக்கினி** அனுபவம் பெற்றவர்கள் **மிகவும் சாந்தமாக** மாறினார்களாம், **சுபாவம்** மாறியது, போகும் இடமெல்லாம் அற்புதங்களும் நடந்ததாம். இப்படியெல்லாம் அந்த குறிப்பிட்ட புஸ்தகங்கள் விவரிக்கின்றன.

☐ இவைகளையா **ஆவியின்** கனி என்று பவுல் கலா 5:22ல் கூறுகிறார்? சரியாக **மனம் திரும்புதல்** அனுபவம் இருந்தால் அவர்கள் வாழ்க்கையில் இந்த **ஆவியின் கனியின் அடையாளத்தை காணலாம்.** சாந்தம், **இச்சை அடக்கம்,** (Self Control) அன்பு, **நீடிய பொருமை,** விசுவாசம் போன்றவை இவர்களுக்குள் தானாக வந்துவிடுமே ! **அன்னிய பாஷை**
! பேசியபின் இந்த **கனி** உண்டானதாக வேதம் ஒரு இடத்திலும் கற்பிக்கவில்லையே ! ஆவியின் கனி என்று தான் வேதம் கற்பிக்கிறது – அன்னிய பாஷையின் கனி என்று வேதம் போதிக்கவில்லை.

ஆகவே அன்பானவர்களே !

☐ ஒருவன் **மனம் திரும்பினாலே** போதுமே ! **அற்புதங்கள்,** பிசாசை துறத்துதல், **வியாதிகளை சுகமாக்குதல்** யாவும் உண்டாக வேண்டுமே! மாற், 16:17லிருந்து அந்த அதிகாரம் முடிய வாசித்து பாருங்கள். **அன்னிய பாஷை** சுவிசேஷம் அறிவிக்கும் என்றோ, **அன்னிய பாஷை அற்புதம்** செய்யும் என்றோ, **அன்னிய பாஷை பிசாசுகளை** துறத்தும் என்றோ வேதம் ஒரு இடத்திலும் கூறவில்லையே !

ஆனால் எனக்கு தெரிந்து சென்னையில், திருச்சியில், திருநெல்வேலியில், கன்னியாகுமரி ஜெபபுரை என்று அழைக்கப்படுகிற குட்டி குட்டி வீட்டு ஜெபங்களை நடத்தும் பெண்கள் **அன்னிய பாஷையில்** பிசாசை துரத்தும் அசுத்த ஆவியின்செயல் நடைபெறுகிறது.

**1907ல் முதன் முதல் பொய்யான அன்னிய** பாஷை பேசிய **ஜென்னி** என்ற பெண்ணின் **காதலன்** கூறியது போல இவர்கள் பேசிய அன்னிய பாஷையில் **புதிய சப்தங்கள்** உண்டானது என்றார். அப்போஸ்தலர் 120 பேர் பேசிய **பற்பல பாஷைகளையும்** இவர் கூறிய சப்த அடையாளம் மிஞ்ஜுவதுபோல் **பேரொலி** உண்டானது. சிலர் **கூக்குரல்** இட்டார்கள், ஒரு சிலர் **அன்னிய பாஷையில் அழுதுகொண்டே இருந்தார்கள்** என்று அவர் கூறியது மிகவும் தமாஷாக இருந்தது !

**புதிய ஏற்பாட்டு சபையில் ஆவியானவரின் முதல் இறக்கத்தில் சீஷர்கள் அன்னிய பாஷையில்** பேசினார்கள், **துதித்தார்கள், தேவ மகத்துவத்தை** பேசினார்கள் என்றுதான் நாம் கேட்டிருக்கிறோம். **அன்னிய பாஷையில் அழுவது** எப்படி? என்பதை விளங்கிக்கொள்ள முடியவில்லை. நான் ஒரு டாக்டர் என்பதால் பயித்தியக்காரர்கள் அல்லது **மனநோய் பிடித்தவர்கள் அப்படி அழுவதை** பார்த்திருக்கிறேன். ஆனால் **அன்னிய பாஷையில் அழுவது** நம்ப முடியாத பெரும் ஏமாற்றுத்தனமாக இருக்கிறது !

☐ ஒரு கல்யாணத்தில் இந்துக்கள், இஸ்லாமியர் பொதுமக்கள் கலந்திருக்கிறார்கள். **Fr.** பெர்க்மன்ஸ் அவர்கள் கல்யாணத்தை நடத்தி வைக்கிறார். ஸ்தோத்திர பாட்டு பாடினார். உடனே கல்யணத்தில் கலந்துகொண்டவர்களையெல்லாம் **அன்னிய பாஷையில் ஜெபியுங்கள்** என்று ஊக்கப்படுத்துகிறார். **புற மதத்தினர்** அந்த கட்டளையை பற்றி என்ன நினைப்பார்கள் ? என்று கூட அவரால் யோசிக்க முடியவில்லையே! என்னால் தொடர்ந்து அந்த கல்யாணத்தில் உட்கார முடியவில்லை. எழுந்து ஊருக்கே திரும்பிவிட்டேன். ஆனால் இது முற்றிலும் **பிசாசின் ஆவியை** சம்பந்தப்பட்ட அடையாளம்.

## (கனடா) டொரோண்டோ எழுப்புதல் கூட்டம்

☐ உங்களில் பலர் கேள்விப்பட்டிருக்கலாம் **டொரண்டோ எழுப்புதல்** என்ற பெயரில் கனடா நாட்டில் பெரிய **எழுப்புதல் கூட்டம்** ஊழியர்களுக்கென்றே ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த எழுப்புதல் நிகழ்ச்சியை வீடியோவில் 5 நாட்கள் நிகழ்ச்சிகளையும் நான் கண்டேன்.

**தமாஷ் (Commedy) சினிமா படம் பார்த்ததுபோல் இருந்தது**

☐ அன்னிய பாஷையில் **அழ முடியுமானால்** அன்னிய பாஷையில் **ஏன் சிரிக்க கூடாது?** என்று அந்த எழுப்புதல் கூட்டத்தின் பிரசங்கத்தில் அறிவிக்கப்பட்டது. கலந்துக் கொண்டவர்கள் அனைவரும் **உலக பிரசித்தபெற்ற பிரசங்கிமார்களும்,** குணமாக்கும் வரம் பெற்றவகளுமாக பலர் கலந்துகொண்டனர்.

அந்த நிகழ்ச்சியில் ஒரு கட்டத்தில் செய்தி முடிந்து **பாடல் நேரம்,** ஜெப நேரம் எல்லாம் ஒன்றாய் இணைந்து நடத்தினார்கள். அப்போது முழு உலகம் கிறிஸ்த சமூகமும் கண்டிராத **பைத்தியக்கார சம்பவம்** நடந்தது பாருங்கள்! அதை TVயில் லைவாக காட்டினார்கள். அதைக் கண்ட உலகமே **கைகொட்டி சிரித்தது,** காரணம் **அன்னிய பாஷையில் அழுவதை** போல **அன்னிய பாஷையில்** ஆவியில் நிறைந்து அத்தனை பேரும் **சிரிக்க தொடங்கிவிட்டனர்.**

மேடையில் உள்ள பிரபல **பிரசங்கிமார்** முதல் நாடுகளிலிருந்து வந்து கூட்டத்தில் கலந்துகொண்ட பலர் அந்த எழுப்புதல் கூட்டத்தில் கலந்துகொண்ட மிகப்பெரிய **பிரசித்திபெற்ற பிரசங்கிமார்கள்** வரை ஆவியில் நிறைந்து **அன்னிய பாஷையில் சிரித்தார்கள்** பாருங்கள் ! அந்த அரங்கமே **சிரிப்பு சத்தத்தால்** நிறைந்தது! இதில் வெட்கக்கேடு என்னவென்றால் மெத்த **வேத படிப்பு** படித்த **வேதாகம பண்டிதர்களும்,** சுகம் அளிக்கும் வரம் பெற்றவர்களும்மான **ஓரல் ராபர்ட், கெனத்ஹேகன் வில்லியம் பெக் , மாரி செருல்லோ** போன்றவர்களும் **சிறித்து சிறித்து** கீழே விழுந்தார்கள். விழுந்தும் அவர்களால் **சிறிப்பை** அடக்க முடியவில்லை. **கண்களில தண்ணீர்** வர வாயில் **எச்சில் ஒழுக** கட்டுபாடற்ற முறையில் அவர்கள் சிறித்து **ஒருவர்மேல் ஒருவர் விழ** சிறிப்பை அடக்க இயலாமல் தவித்தனர். அன்றைய வீடியோ டேப் இப்போதும் உண்டு.

**காலையில்** அந்த எழுப்புதல் கூட்டத்தில் **சிரிக்க ஆரம்பித்தவர்கள்** மதியம் வரை சிரித்து சிரித்து தன் **கவுரவம் பாராமல்** தரையில் **உருண்டு உருண்டு** சிரித்தார்கள். **உலகமே TV வழியாக** அந்த நிகழ்ச்சியை பார்த்தனர். சாதாரண உலக மக்கள் அதை பார்த்து **என்ன நினைப்பார்கள்?** முன் குறிப்பாக அவிசுவாசிகள் முன் இந்த **ஸ்டார்** ஊழியர்கள் சிரித்து சிரித்து விழுந்த ஆர்பட்டங்களை கண்ட மற்ற **உண்மை விசுவாசிகள்** வெட்கி தலை குனிந்தார்கள்.

அந்த குறிப்பிட்ட நாட்களில் நான் அமெரிக்காவில் **நயாகரா** நீர்வீழ்ச்சியின் அருகே உள்ள ஒரு சிறு டவுனில் என்னை பிரசங்கிக்க அழைத்த ஊழியர்களோடு அமர்ந்து அந்த **TV கூத்தை** பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த நிகழ்ச்சியில் ஒரு **பெண் ஊழியக்காரி** ஒருவர் அவள் ஒரு **பிரபல பிரசங்கி** என்று அறிமுகப்படுத்தப்பட்டவர். **குட்டை உடையோடு** கூட்டத்தினர் முன் சிரித்துக்கொண்டே **கீழே தரையில் உருண்டு** நம் **தமிழ் நாட்டு** பெந்தேபோஸ்தே சபை **பெண்கள் உருளுவார்களே** அதைபோல அந்த **பெண் ஊழியக்காரியும் உருண்டாள்** அவள் **தரையில் உருண்டு பிரண்டதை** பார்த்தவர்கள் காரி துப்பாத குறையாக அவள் உருண்டபோது உடையில் காணப்பட்ட ஆபாச காட்சியை கண்டு கூடியவர்கள் முகம் சுழித்தனர்.

☐ சில மாதங்களுக்கு பிறகு உலக பெரும் ஊழியக்காரர்கள் அனைவரும் அந்த நிகழ்ச்சியை விமரிசித்து கண்டித்து **பேட்டி கொடுத்தார்கள்.** ஆண்டவர் நாமம் இவர்களின்

**அன்னிய பாஷை சிரிப்பால்** தூஷிக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் **பொது மக்களிடம்** அந்த சாட்சி கொட்ட **அன்னிய பாஷை** சம்பவத்துக்காக **மன்னிப்பு கேட்க வேண்டும்** என்றும் அவர்கள் கர்த்தரிடமும் **மன்னிப்பு கேட்க வேண்டும்** என்றும் பல ஊழியர்கள் **அறிக்கை விட்டார்கள்.**

- ☐ அனேக மாதங்களுக்கு பிறகு **ஓரல் ராபர்ட் மட்டும்** தன் தவறான சாட்சிகெட்ட அந்த **அன்னிய பாஷை** சிறப்பு நிகழ்ச்சியில் தான் கலந்து கொண்டதற்காக **வெட்கப்படுகிறேன். மன்னிப்பு** கேட்கிறேன் என்றார். இனி அந்த **சிரிப்பு அன்னிய பாஷையை** குறித்து நான் எங்கும் **பேச மாட்டேன்** என்றும் தன் பத்திரிகையான **அபன்டென்ட் லைப்** என்ற பத்திரிகையில் எழுதினார்.
- ☐ **உலக பிரசித்திபெற்ற** உண்மை ஊழியர் **பில்லிகிரஹாம்** அவர்கள் அந்த மோசமான சாட்சி கெட்ட நிகழ்ச்சிகளை உலக மக்கள் பார்க்க நேர்ந்ததால்**தான் வருத்தப்படுகிறேன்** என்று நாகரிகமாக அதை விமர்சித்தார்.
- ☐ **போலீசும்** தலையிட்டு அந்த நிகழ்ச்சிகள் இனி **தொடராமல்** அதன் நிர்வாகிகளுக்கு தடைவிதித்து நோட்டீஸ் கொடுத்ததாக நான் கனடா நாட்டுக்கு வந்து சேர்ந்த பின் சிலர் மூலமாக கேட்டு அறிந்தேன்.

அதை காப்பியடித்து **இந்தியாவிலும்** சிலர் அந்த **சிரிப்பு அன்னிய பாஷை** அனுபவத்தை தொடங்கினார்கள், ஆனால் யாரும் அதை ஊக்குவிக்கவில்லை! பெந்தேகோஸ்தே சபைகளின் விசுவாசிகளும் அதை விரும்பவில்லை, அப்படியே அந்த **சிறிப்பு அன்னிய பாஷை** இந்தியாவில் அமுங்கி போனது.

- ☐ பரிசுத்த **ஆவியானவரின் நிறைவின் அடையாளம் என்று** சொல்லி பேசிய பெந்தேகோஸ்தே சபையினரின் **அன்னிய பாஷையின் பயித்தியக்கார சிரிப்பு** அடையாளத்தை குறித்த செய்திகளை வாசிக்கும் **பெந்தேகோஸ்தே சபை விசுவாசிகள்** தயவுசெய்து **இனியாவது** உங்களை அன்னிய பாஷை பேசுவதை கட்டுப்படுத்திக்கொள்ளுங்கள். உங்களை சரிபடுத்திக் கொள்ளுங்கள். உடனே **திடீரென உங்களால்** அன்னிய பாஷை பேசுவதை கட்டுப்படுத்த முடியாது. **கர்த்தரிடம் ஜெபித்து** அவர் உதவியை பெற்று உங்கள் வீட்டில பிள்ளைகள்முன் முதலாவது உங்கள் மாற்றத்தை காட்டுங்கள்.
- ☐ நான் இந்த கட்டுறை 2ம் பாகம் முடிந்தவுடன் பல **பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்மார்** தாங்கள் **அன்னிய பாஷை** பேசுவதை **நிறுத்திவிட்டோம்.** எங்கள் **கண்களை திறந்த** உங்களுக்கு **நன்றி என்று கூறினார்கள்.** கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

**வரலாறு என்ற பெயரில்** எழுதப்பட்ட அந்த குறிப்பிட்ட புஸ்தகங்களில் பரிசுத்தாவியானவர் **மாம்சமான யாவர்** பேரிலும் ஊற்றப்படுவார் என்று அறிவித்த தோடல்லாமல் இப்போது **கத்தோலிக்க சபைகளிலும் கரிஸ்மேட்டிக்** குழுவினர் மேலும் **ஆவியானவர் இறங்கியுள்ளார்.** ஆவியானவர் தன் வாக்குத்தத்தை **அவர்களிடமும் நிறைவேற்றினார்** என்று

எழுதி குறிப்பிட்டுள்ளனர். இவர்களின் அறிவிப்பு **எத்தனை தவறானது** என்பதை கொஞ்சம் யோசித்துப்பாருங்கள்.

**கத்தோலிக்கர்களின்** அதிமுக்கிய உபதேசமான **செத்துபோன மரியாளிடம்** ஜெபிப்பது, செத்துப்போன **அந்தோனியாரிடம்** ஜெபிப்பது, **3 அற்புதங்களை** ஒருவர் செய்ததாக **ஆதாரம்** காட்டினால் போதும் **அவர் செத்துப்போன** கன்னியாஸ்திரியானாலும், **மதர் தெரசாவானாலும்** அவர்கள் **பரிசுத்தவான்கள் பட்டியலில்** இணைந்து விடுகிறார்கள். அவர்களிடமெல்லாம் **ஜெபிக்க ஜெபமாலை** தயாரித்திருக்கிறார்கள்.

**செத்துப்போன ஆவிகளிடம்** பேசுகிறவன் **சபிக்கப்பட்டவன்** என்று (உபா, 18:10) வேதாகமம் போதிக்கிறது, ஆனால் செத்துப் போனவர்களுடன் ஜெபிக்கும், **செத்துப்போன ஆவிகளை** சொர்கத்துக்கு அனுப்ப அவர்கள் பெயரில் **பணத்தை பெற்று** ஜெபிக்கும் இப்படிப்பட்ட வேத வசனத்துக்கு புறம்பான ஏமாற்ற கள்ள உபதேசத்தை கைக்கொண்ட **கத்தோலிக்க சபையினர்மேல்** பரிசுத்த ஆவியானவர் **எப்படியிறங்குவார்?**

## போட்டா டிவைன் சென்டர்

கேரளாவில் **ஆலுவா** என்ற ஊருக்கு அருகில் **போட்டா** என்ற சிறு கிரமத்தில் **டிவைன் சென்டர்** என்ற **கத்தோலிக்க** குருமார் ஏற்படுத்திய **தியான முகாம்** உண்டு. இந்த குருமார்களின் தலைமை **குருவுக்கு** நம்முடைய சகோ. D.G.S. **தினகரன்** அவர்கள் தான் பிரதான குருவாகும். அவர் நடத்திய **பவர் மினிஸ்ட்ரியில்** 15 நாட்கள் பயிற்சியில் **கத்தோலிக்க குருமாரில் சிலர்** பயிற்சி பெற்றனர், அதோடு சகோ. D.G.S. **தினகரன்** அவர்கள் கூட்டங்கள் எங்கு நடந்தாலும் தொடர்ந்து பங்கெடுத்து ஜெபத்தில் மக்களின் **பெயர்களை** எப்படி அழைப்பது **வியாதிகளின்** பெயர்களை எப்படி கூறுவது? **கர்த்தர் எனக்கு காட்டினார்** என்று தீர்க்கதரிசனமாக எப்படி கூறுவது? அத்தனையும் இவர்கள் சகோ. D.G.S. தினகரன் அவர்களிடம்தான் இவர்கள் யாவரும் கற்றது ஆகும். அதில் முக்கியமான கத்தோலிக்க **குருவானவர்** சகோ. தினகரனை போலவே பிரசங்கிப்பார், அந்த குருவானவரிடமருந்து மற்ற **சில குருவானவர்கள்** அந்த தொழில் நுனுக்கத்தை கற்றனர்.

உடனே **டிவைன் சென்டர்** என்ற பெயரில் **வியாதிகள் சுகமாகிறது, சாராயத்துக்கும்** போதை பழக்கத்துக்கும் **அடிமையானவர்கள்** 10 நாட்கள் அவர்கள் போட்டா என்ற இடத்துக்கே வந்து தங்க வேண்டும். வெளியே போகவோ மற்றவர்கள் இவர்களை காணவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள். **ஜெபம்,** தியானம், **கவுன்சிலிங்** என்று பல ஏற்பாடுகளை அவர்களுக்காக செய்துள்ளனர். அந்த தியானகூட்டதில் பலர் **போதை, குடி** பழக்கத்திலிருந்து **விடுதலையாக்கப்பட்டார்கள்** என்று அவர்களின் பத்திரிகை மூலமாகவும் அவர்கள் **அனைத்து கத்தோலிக்க சபைகளிலும்** விளம்பரம் கொடுக்கிறார்கள். இப்போது **மலையாள TVயில்** ஒரு சேனலையே ஆரம்பித்து **நல்ல விளம்பரங்களை** செய்து வருகிறார்கள். அதன் மூலம் அவர்களுக்கு செம பணம் கொட்டுகிறது. ஏராளமானவர்கள் வேளாங்கன்னிக்கு போவதுபோல **போட்டா** என்ற அந்த ஊருக்கு சென்று வருகிறார்கள்.

- ☐ இது ஒரு பக்கம் – மற்றோரு பக்கம் அதே காம்பவுண்டுக்கு சற்று அருகில் **மற்றொரு தியான முகாம்** வைத்துள்ளார்கள். இங்கு **பரிசுத்த ஆவியின் நிறைவும் அன்னிய பாஷை** வேண்டும் என்று அந்த ஸ்தாபனத்துக்கு விண்ணப்பித்து அங்கு சென்றால் அவர்களும் 10 நாட்கள் அந்த காம்பவுண்டை விட்டு வெளி உலகை கானாதவாறு பலத்த காவலோடு கண்கானிக்கப்பட்டு தங்க வைக்கிறார்கள். அவர்கள் குடும்பத்தோடு தங்கவேண்டும்.

அங்கு **அன்னிய பாஷை பேசி பழகும்** பகுதி அங்கு உண்டு. அங்கு **பிரசங்கம் – பாடல்** கைதட்டுதல், **குதித்தல்,** உளருதல், யாவும் நடைபெறுகிறது. இந்த குழுவில் கலந்துகொண்டும் **அன்னிய பாஷை** பேசாதவர்களுக்கு என்று மற்றொரு **விசேஷ நிகழ்ச்சியை** ஏற்பாடு செய்து ஸ்தோத்திர கூட்டத்தை **மேல் மாடியில்** நடத்துகிறார்கள். இதில் அவர்களை **பரவச நிலைக்கு** கொண்டுபோக என்ன என்ன முறைகள் யுக்திகள் கையாள வேண்டுமோ, அவைகளை கையாண்டு **அன்னிய பாஷையில்** பேசி பழக வைக்கிறார்கள். **ஹிப்நாட்டிஸம் முறையும்** அங்கு கையாளப்படுவதாக கூறப்படுகிறது.

சில ஆண்டுகளுக்குமுன் அந்த டிவைன் சென்டரில் **அன்னிய பாஷை** கற்றுக்கொடுக்கும் இடத்தில் ஒருவர் கூக்குறலிட்டும். சப்தம் உயர்த்தியும் **கதற ஆரம்பித்தார்.** அங்கு பாடப்பட்ட பாடல்களை டிரம் (கொட்டு) சப்தத்துடன் இணைந்து பாடவைத்தும் அதன் காரணமாக அவர் பரவசத்தின் மிக உச்சநிலைக்கு சென்று **மனநிலை பாதிக்கப்பட்டு** கோட்டயம் என்ற அருகில் உள்ள டவுனில் **மனநோய் டாக்டரிடம்** சிகிச்சை பெற்ற செய்தி **மலையாள மனோரமா பத்திரிகைகளில்** வெளியாகி **டிவைன் சென்டரில்** என்னென்னமோ நடப்பதாக **பல வதந்திகள்** தீ போல் பறவி **அரசாங்கமும்,** போலீசும் **டின்வைன் சென்டருக்குள்** திடீரென்று பிரசேசித்து **விசாரனை நடத்தியது ,** பல வருடங்களுக்கு முன் **தமிழ் வார பத்திரிகைகளிலும்** அந்த செய்தி வெளிவந்தது, என் **ஜாமக்காரனிலும்** அந்த பத்திரிகை செய்தியை **போலீஸ் விசாரனை** விவரம் முழுவதையும் வெளியிட்டேன் என்பது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும் என்று நம்புகிறேன்.

- ☐ இதற்கெல்லாம் **மூல காரணம் அன்னிய பாஷை** பெற்றுக்கொள்ள வேண்டும், **அக்கினி அபிஷேகம்,** பரிசுத்த அவியின் **வல்லமை** பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற வெறியும், **தவறான ஆசையும் ஆகும். டிவைன் சென்டரில்** பல பாஷைகளில் வெளியிடும் **மாதாந்திர பத்திரிகையில்** வரும் **பவர் மினிஸ்ட்ரி** என்ற கவர்ச்சி விளம்பரம், **TV விளம்பரம்** இப்படிப்பட்ட **மீடிவே மக்களை கவர காரணம் ஆகும்.**

**அன்னிய** பாஷை, **அக்கினி** அபிஷேகம் ஆகியவைகளை எப்படியாவது பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற வெறி. **கஞ்ஜா சாப்பிட்டவர்போல** அடையும் அந்த பரவச நிலைக்கு செல்லும் ஆசை இன்று பெந்தேகோஸ்தே சபையினருக்கும் கரிஸ்மேட்டிக் குழுவினருக்கும் உண்டாகிவிட்டது.

**கத்தோலிக்கரும், கரிஸ்மேட்டிக்** குழுவினரும் **பரிசுத்தாவியை பெற்றுக்கொள் கிறார்கள்** என்று **பெந்தேகோஸ்தே சபை தலைவர்களும்** நம்பி **அன்னிய பாஷைக்கு** விளம்பரம் கொடுக்கிறார்கள்.

இப்படிப்பட்ட **கள்ள உபதேசங்களிலிருந்து** மக்களை எப்படியாவது விடுவிக்க வேண்டும். **அன்னிய பாஷை** போலியானது என்பதை இவர்களுக்கு விளங்கவைக்க வேண்டும் என்பதுதான் என் பரம் ஆகும். ஜாமக்காரனாகிய **என்னால் எழுதத்தான் முடியும்.** நான் பிரசங்கிக்கும் **கன்வென்ஷன்களில்** இந்த போலி **அன்னிய பாஷையை** குறித்து பகிரங்கமாக பேசமுடியும், அதற்குமேல் என்னால் ஒன்றும் செய்ய இயலாது! ஆகவே **அன்னிய பாஷை** என்பது ஒருமாயை, அது ஒரு **போலியான பரவச அனுபவம்.** என்பதையும் **இந்தியாவின்** அனைத்து **சபைக்காரர்களுக்கும்** விளங்கிக்கொள்ளத்தான் **புஸ்தக வடிவில்** இதை 2020 ல் வெளியிட கர்த்தர் அருள் செய்வார் என்று நம்புகிறேன்.

இந்த பாகத்தோடு ஜாமக்காரனில் **அன்னிய பாஷைப்பற்றி** எழுதுவதை முடித்துக்கொள்ள போகிறேன். அதனால்தான் **பெந்தேகோஸ்தே சபைகளின் வரலாறும்** – போலி **அன்னிய பாஷை உருவான விவரமும்** இந்த ஜாமக்காரனில் முடிவு செய்தியாக எழுதினேன். அன்னிய பாஷை பற்றி வேத வசனத்தில் இன்னும் பல விவரங்கள் உண்டு. அவைகளை கர்த்தர் அனுமதித்தால் வரும் காலங்களில் எழுதுவேன்.

இனி **கடைசியாக** வேத வசத்தில் **அன்னிய பாஷைபற்றிய** மேலும் சில முக்கிய விவரங்களை சிறு குறிப்பாக எழுதி முடிக்க பாரப்படுகிறேன்.

### அக்கினி அபிஷேகம்

இன்று பெந்தேகோஸ்தே சபையினரிடையே **அக்கினி அபிஷேகம்** என்ற கவர்ச்சி வார்த்தை பரவலாக உபயோகிக்கப்படுகிறது.

**அக்கினி அபிஷேக முகாம்** என்ற கவர்ச்சி பெயரில் இந்தியாவிலிருந்து சகோ. **மோகன் C. லாசரஸ்,** சகோ. **ராபின்சன்,** சகோ. **அப்பாதுரை** போன்ற இன்னும் **பல பிரபல** ஊழியர்கள் தமிழ்நாட்டிலும், வெளி நாட்டிலும் அப்படிப்பட்ட **கூட்டங்களை** நடத்துவதாக **விளம்பரப் படுத்துவதை அவர்கள் பத்திரிகையில்** கண்டிருப்பீர்கள். நிறைய பேர் அது ஏதோ **விசேஷ அபிஷேகம்** என்று நினைத்து **ஏமாந்து போகிறார்கள்.**

**ஆவியானவர் – அக்கினி** : மத் 3:11 (இயேசு) அவர் **பரிசுத்த ஆவியினாலும் – அக்கினியினாலும்** – உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.

**ஜலம் – ஆவியானவர்** யோ 3:5 ஒருவன் **ஜலத்தினாலும் – ஆவியினாலும்** பிறவாவட்டால் **தேவனுடைய இராஜ்யத்தில்** பிரவேசிக்கமாட்டான் என்று எழுதப்பட்டுள்ளது. இங்கே **ஜலம் – ஆவியானவர்** என்ற இரண்டு பதமும் **பரிசுத்த ஆவியானவரையே** குறிக்கும். அப்படியே **பரிசுத்த ஆவியினாலும் – அக்கினியினாலும்** பிறவாவட்டால் என்று எழுதப்பட்டது. இந்த இரண்டு பதமும் **ஆவியானவரையே** குறிக்கும் வசனங்களாகும். இதற்கு Paralisam **என்று** கூறுவார்கள். **எபியோர்கள்** சரித்திரம் எழுதும்போது **ஒரு வார்த்தைக்கு** ஒரே அர்த்தமுள்ள **இரண்டு வார்த்தைகளை** உபயோகிப்பது வழக்கம்,

மெய்யாகவே ! மெய்யாகவே !

ஆமென் ! ஆமன் !

**ஆவியானவர்** – அக்கினி

**ஆவியானவர்** – ஜலம்

மேலே குறிப்பிட்ட இப்படிப்பட்ட வார்தைகளை குறித்து தியானிக்கும்போது **சரித்திர பிண்ணனியை** பற்றி அறியாமல் அவைகளை குறித்து பிரசங்கிப்பதால் பிரசங்கிப்பவர் அந்த வார்த்தைக்கு தவறான அர்த்தம் கொடுத்து தவறாக பிரசங்கிக்கிறார்கள்.

யோ. 3:5 **ஜலத்தினாலும் – ஆவியினாலும்** பிறவாவிட்டால் என்பதற்கு **ஞானஸ்நானம்** பெறாவிட்டால் **பரலோகம் போக முடியாது** என்று விசுவாசிகளை **பயமுறுத்துவார்கள்.** ஞானஸ்நானத்தைக்குறித்து ஏராளமான **வசனங்கள்** வேதத்தில் பல **பாகங்களில் உண்டு.** ஆனால் இந்த குறிப்பிட்ட **வசனம் ஞானஸ்நானத்தை குறிப்பதல்ல**!

## அக்கினி

**நெருப்பில்** (அக்கினியில்) **கர்த்தர் இருக்கவில்லை** (1 தீமோ. 19:12) அக்கினி அபிஷேகம் என்று கூறும் பெந்தேகோஸ்தே சபை விசுவாசிகள் பாஸ்டர்கள் கவனிக்கவும். **அக்கினி அபிஷேகம்** என்ற இந்த கவர்ச்சி வார்த்தை சபை மக்களை ஒரு வேளை கவரும். ஆனால் அது ஆபத்தான அர்த்தம் கொண்டதாகும்.

**சிலரை நெருப்பிலிருந்து (அக்கினியிலிருந்து) இழுத்துவிடுங்கள்** (யூதா 22)

**அக்கினி** என்ற சொல் பரிசுத்த ஆவியானவருக்கு மறுபெயர் அல்ல. **அக்கினி கொல்லக்கூடியதும். அழிக்கக் கூடியதுமாகும்.**

பெந்தேகோஸ்தே சபையினர் வைத்திருக்கும் வேத புஸ்தகமும் என் கையில் உள்ள வேத புஸ்தகமும் ஒன்றுதான். நம் வேதத்தில் **அக்கினியை** குறித்து எழுதிய பாகம் எல்லாம் **அழிக்கவும் – கொல்லவும்** பயன்படுத்தப்பட்ட வார்த்தை என்பதை நீங்கள் அறிவீர்களே ! பின் ஏன் எனக்கு **அக்கினி** வேண்டும் **அக்கினி அபிஷேகம்** வேண்டும் என்றும் **அக்கினி – அக்கினி** என்று சபை மக்களை கதற விடுகிறீர்கள்! பாவம் சபை மக்களும் நீங்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டி **ஆமென்! அல்லேலூயா!** கூறுகிறார்கள்.

மத் 18:8 25:41 வசனங்கள் யாவும் **நித்திய அக்கினியை** குறித்து கூறுகிறது அவைகள் **அழிப்பதற்காகவே** பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் ஆகும்.

சில பெந்தேகோஸ்தே **பாஸ்டர்கள்** சகோ. மேகன் **C.** லாசரஸ் போன்ற ஊழியர்கள் தாங்கள் பிரசங்கிக்கும்போது **அக்கினி அபிஷேகம்** உங்கள் **பாவங்களையெல்லாம்** சுட்டெரிக்கும், நீங்கள் **பரிசுத்தவான்கள்** ஆவீர்கள். **ஒரு அல்லேலூயா**! சொல்லலாமா? என்று அவர் கூற அத்தனைபேரும் ஆமென் – அல்லேலூயா கூறியதை சகோ. மோகன் **C.** லாசரஸ் அவர்களின் செய்தியில் **CD** யில் நானே கேட்டிருக்கிறேன். அது நாலுமாவடியில் பேசிய செய்தி ஆகும்.

**அக்கினி** உன்னை **பரிசுத்தமாக்கும்,** அக்கினி உன் **அக்கிரமத்தை நீக்கும்,** . . . . . . . . . . . . . . . . . . . . . . . என்றெல்லாம் கூறி இவர்கள் பிரசங்கிக்கும் போது மக்கள் உணர்ச்சிவசப்பட்டு **அக்கினி அபிஷேகம்** எனக்கு வேண்டும் **என் பாவம் நீங்க வேண்டும், அக்கிரம்** நீங்க வேண்டும், **நான் பரிசுத்தமாக வேண்டும்** அதற்கு எனக்கு **அக்கினி** வேண்டும் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட ஒவ்வொருவரும் கண்ணீர்விட்டு கதருவதை நீங்கள் பார்க்கும்போது உங்களுக்கே கண்ணீர் வரும். எப்படியெல்லாம் ஏமாற்றுகிறார்கள் !

வேதத்தை **முறைப்படி** வாசிக்காத, **வசனம்** தெரியாத அந்த அப்பாவி மக்கள் இவர்கள் பிரசங்கத்தை மட்டும் கேட்டு ஏமாந்து போய் **ஆசீர்வாதமும்** இல்லாது, பாவமும் கழுவப்படாது வெருமனே திரும்புவார்கள், என்ன பரிதாபம் !

இவர்கள் எல்லாரும் வசனம் தெரியாத அப்பாவிகள் என்று ஏன் கூறுகிறேன் என்றால் **அக்கினி** உங்கள் பாவத்தை கழுவாது. இயேசு கூறினார் நான் கூறிய **இந்த வசனம்** இப்போது உங்களை **சுத்தமாக்குகிறது** என்றார். இயேசுவின் வசனத்துக்கு கீழ்படிந்தால் **இயேசுவின் இரத்தம்** உன்னை கழுவி சுத்திகரிக்கும். 1 யோ 1:7 இயேசுவின் இரத்தம் சகல பாவத்தையும் கழுவி சுத்திகரிக்கும் என்றுதான் வேதம் நமக்கு போதிக்கிறது. **அக்கினி** உங்களை சுத்திகரிக்கும் என்று வேதம் கூறவில்லை.

இவர்கள் பிரசங்கத்தில் குறிப்பிடும் அக்கினி விவரத்தை **ஏசாயா தீர்க்கன்** புஸ்தகத்தில் வாசிக்கலாம். (ஏசா 6:6,7) இந்த குறிப்பிட்ட வசனத்தில் **ஏசாயா** என்ற தீர்க்கதரிசியை கர்த்தர் 7 ராஜாக்களுக்கு தீர்க்கதரிசனம் கூறி எச்சரிக்க அழைத்தார். கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்க அவனை பரிசுத்தப்படுத்தவேண்டி கர்த்தர் ஒரு தூதனை அனுப்பி பலிபீடத்திலிருந்து ஒரு **நெருப்பு தழலை** ஒரு குறட்டால் பிடித்து எடுத்து வந்து **ஏசாயாவின்** வாயை தொட்டு சூடுவைத்துவிட்டு சென்றான். உன் உதடுகளை **நெருப்பினால்** தொட்டதால் **உன் அக்கிரமம்** நீங்கி **உன் பாவம்** நிவர்த்தியானது என்று தூதன் கூறினான்.

இதுதான் நடந்தது. இப்போது இதை வாசிக்கிற நீங்களே கூறுங்கள் இந்த நெருப்பு துண்டுக்கும் **அக்கினி அபிஷேகத்துக்கும்** அல்லது **பரிசுத்த ஆவியானவருக்கும்** ஏதாவது சம்பந்தம் உண்டா?

**அக்கினி அபிஷேகம்** பெற்றுக்கொள்ள அந்த குறிப்பிட்ட ஊழியர் நடத்தும் கூட்டத்துக்கு போகிறேன், சென்னையில் நடக்கும் மற்றொரு கூட்டத்துக்கு போகிறேன் என்று கூறுகிறவர்களை நான் எச்சரிககிறேன். **ஏமாந்து போகாதீர்கள்.**

பரிசுத்த ஆவியானவர் – அக்கினியல்ல

பரிசுத்த ஆவியானவர் – எண்ணையும் அல்ல

பரிசுத்த ஆவியானவர் – **புறாவும்** அல்ல

பரிசுத்த ஆவியானவர் – தண்ணீரும் அல்ல

பிதா அனுப்பிய **மேசியாவை** யோவான் ஸ்நானகனுக்கு மட்டும் **அடையாளம்**

**காண்பிக்கவும் இயேசுதான்** மேசியா என்பதை உறுதிப்படுத்தவும் **பரிசுத்தாவியானவரை** இயேசுவின் மேல் இறக்கி காண்பித்தார். **ஆவியானவருக்கு** உருவம் **இல்லாததால் புறாவின் ரூபத்தில்** இயேசுவின் தோளில் பறவையை அமரச்செய்து **இவர் என் நேசக்குமாரன்** இவரில் நான் அன்பாய் **இருக்கிறேன்** என்று வானத்திலிருந்து பிதாவானவர் கூறி யோவானுக்கு அடையாளம் காட்டினார்.

ஆனால் அதை விளங்கிக்கொள்ளாத பலர் பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமாக **புறா** படத்தை நோட்டில் வரைந்து கொள்வதும், **புறா சின்னத்தை** மெட்டலில் உருக்கி வார்த்து கோட்டில், ஷர்டின் பாக்கெட்டில் ஒட்டவைத்துக்கொள்கிறார்கள். புறமதஸ்தவர்கள் **சிலுவை சின்னம்** கூட வாங்கிக்கொள்வார்கள். ஆனால் **புறா சின்னத்தை** வாங்கிக்கொள்ள மாட்டார்கள். ஆகவே பரிசுத்தாவியானவரை பெநதேகோஸ்தே சபையினர் துண்டு துண்டாக ஆக்கி அவரை பல பெயர்களில் அழைக்கிறார்கள்.

ஆகவே தயவுசெய்து **அக்கினி அபிஷேகம்** வேண்டும் என்று கூக்குரலிடாதீர்கள். நீங்கள் அழைத்து அக்கினி இறங்கினால் என்ன ஆகும் என்பதை வேதம் கூறுவதை வாசித்து பாருங்கள். ஆபத்தை விலையில்லாமல் வாங்கிவைத்து வேதனை அனுபவிக்காதீர்கள்.

**அக்கினியை** நீங்கள் **அழைத்தால்** என்ன ஆகும் வாசித்துப்பாருங்கள் நல்ல கனி (கலா. 5:22ம் வசனத்தில் உள்ள கனி என்தற்கு சுபாவம் என்று அர்த்தமாகும். ஆகவே நாங்கள் **நல்ல சுபாவத்தை** சாட்சியாக நீங்கள் காட்டி ஜீவிக்காமல் போனால்) நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு **அக்கினியிலே** போடப்படும். மத். 3:10, 7:19, லூ. 3:9 ஆமோஸ் 7:4 **அக்கினியால்** கர்த்தர் நியாயந் தீர்பேன் என்றார்.

வேதத்தில் இன்னும் ஏராளமான வசனங்களில் **அக்கினியை அழிப்பதற்கும் எரிப்பதற்கும்** மட்டுமே கர்த்தர் உபயோகிப்பதாக எழுதியிருக்கிறது. நீங்கள் கேட்டாலும் கேட்காவிட்டாலும், விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் கடைசி நாளில் கோதுமை மணிகளை பிரித்துவிட்டு **பதர்களை மட்டும் சுட்டெரிக்கவே கர்த்தர் அக்கினியை** அனுப்புவார். ஜாக்கிறதை, **அக்கினி அபிஷேகம்** கிடைக்கும் என்று யார் விளம்பரப்படுத்தி அழைத்தாலும் போகாதீர்கள். நீங்கள் மனம் திரும்பாதவர்ளாக இருந்தால் **அக்கினி அபிஷேக** கூட்டமே உங்களை பட்சித்துபோடும்.

- ☐ **பரிசுத்த ஆவியின்** வெளி அடையாளம் **அன்னிய பாஷையா? அன்னிய பாஷையை** நாம் பேசலாமா? **அன்னிய பாஷையை** வேண்டும் என்று கேட்கலாமா? இப்படிப்பட்ட கேள்ளிகள்கொண்ட அன்னிய பாஷையை பற்றிய குழப்பத்தை இதோடு முடித்துக்கொண்டு அன்னிய பாஷை குழப்பம் என்ற பெயரில் இதுவரை எழுதப்பட்டதை புஸ்தகமாக அச்சடிக்க நினைத்திருந்தேன். ஆனால் பரிசுத்தாவியானவரின் பெயரில் **பெந்தேகோஸ்தே சபையினர்** மக்களை எப்படியெல்லாம் குழப்புகிறார்கள் என்பதை குறித்த கேள்விகள் எனக்கு கடிதங்களாக குவிந்தவண்ணம் இருக்கிறது. ஆகவே அவைகளுக்கும் பதில் எழுதிவிட்டு அடுத்த மாத ஜனவரி

ஜாமக்காரனோடு (அன்னிய பாஷை குழப்பம் என்ற கட்டுறையை) நிறுத்திக்கொள்ள முயற்சிக்கிறேன்.

1969ம் வருடம் முதல் நான் ஆரம்பித்த ஜாமக்காரனில் வாசகர் கேட்ட கேள்விகளுக்கு நான் பதில் எழுதியதினால் பலரின் வெறுப்புக்குள்ளானேன்.

குறிப்பாக **ஸ்டார் ஊழியர்கள் :**

சகோ. D.G.S. தினகரன் : பரலோகம் சென்றேன் என்று கூறியது பொய் என்று எழுதினேன். (யோ. 313 வாசித்துப்பாருங்கள். இளம் பங்காளர் திட்டம் கர்த்தர் சொன்ன திட்டம் அல்ல. அதுவும் பொய் என்று எழுதினேன். பெரும் கூட்டம் என்னை வெறுத்தது.

சகோ.மோகன் C.லாசரஸ் : (ஜெபத்தில் பெயர் அழைப்பது) பொய் என்று எழுதி ஆதாரமும் எழுதினேன். மற்றொரு பெரும் கூட்டம் என்னை வெறுத்தது. காணிக்கை அனுப்புவதை நிறுத்தினார்கள். அவரை நேசிப்பவர்களும் என்னை வெறுத்தார்கள்.

சகோ. ஜான் ரபீந்தரநாத் : ஒரு சகோதரியை தன்னோடு ஊழியத்துக்கு அழைத்து சென்றதும் ஒரே அறையில் இருவரும் படுத்துக்ககொண்டதும் மக்களும்,பிஷப்மாரும் எச்சரித்தனர்.

LEF Church சகோ. ஜோ. டேனியல் : சபையின் வீழ்ச்சியை குறித்தும். சபை பிள்ளைகளின் கல்யாண விஷயத்தில் சபை மக்களிடம் கண்டிப்பாக இருந்தார். தன் பிள்ளைகளின் திருமணத்தை அப்படி நடத்தவில்லை. இரண்டுமுறை விவாகரத்து செய்த விவரம் எழுதினேன்.

Pastor மோகன் AG Church : பாஸ்டரின் மகனின் சம்பவம், நிர்வாக பிரச்சனையை எழுதினேன். வெறுக்கப்பட்டேன்.

சகோ. பால் தினகரன் : ஜெப கோபுரங்கள் (ஜெபத்தில் பெயர் அழைப்பது) ஜெபத்துக்கு பணம் வாங்குவது, காருண்யா விற்பனை விவகாரம் இவைகளையும் எழுதினேன்.

ஏஞ்ஜல் TV சாது செல்வராஜ் : TVயில் அவரின் பொய் பிரஸ்தாபங்களை, பரலோகம், நரகம் தினசரி போய் வரும் பல பொய்களை எழுதினேன்.

சகோ. சாம் ஜெபதுரை : இயேசுவுக்கும் வியாதி உண்டானது என்று அவர் எழுதியது தவறு என்று எழுதினேன். என் ஊழியத்தில் முதல்முறை வக்கீல் நோட்டீசும் மான நஷட வழக்கு தொடர்ந்த ஒரே ஊழியர் என்ற சிறப்பு பெற்ற அன்னிய பாஷைக்காரர்.

Dr. சாம் கமலேசன் குறித்தும் எழுத வேண்டி வந்தது.

Dr. தியோடர் வில்லியம்ஸ் அவர்களின் விழுகையை குறித்தும் – மீண்டும் எழுந்து பிரகாசித்ததை குறித்தும் எழுதினேன்.

சகோ. R. ஸ்டான்லி சில புரளிகளை குறித்தும் – அன்னிய பாஷை குறித்தும் எழுதினேன்.

Pastor விக்டர் ஞானராஜ் கள்ள உபதேசம் – தூதர்கள் இவர் மனைவிக்கு தெரியாமல் ஆப்பம் தேங்காய்பால் சாப்பிட்டது போன்ற இவரின் பல பொய்களையும் எழுதினேன்.

சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் கூறி தீர்க்கதரிசனம் பொய்யானதை குறித்து எழுதினேன்.

பாஸ்டர் சுந்திரம் மரண விவரம்

பாஸ்டர் சாம் சுந்திரம் மரண விவரம்: ஒரு துப்பரியும் கதையைபோன்று அமைந்து சபை ஆராதனை போலீஸ் பாதுகாப்பில் மூடப்பட்டது.

பக்தசிங் பாஸ்டர் மரண சமயத்தில் உடன் பாஸ்டர்களின் பதவி போராட்டத்தில் பாஸ்டர் பக்தசிங் அவர்களின் மண்டையை பாஸ்டர்கள் உடைத்தது. சொத்து பிரச்சனை விவரம் எழுதினேன்.

பாஸ்டர் ஜீவானந்தம் அவர்களை பற்றியும், உபதேச குழப்பங்கள் பற்றியும் எழுதினேன்.

3 பிரபல மிஷனரி ஸ்தாபனங்கள் பற்றிய விமர்சனங்கள், மிஷனரிகளின் பிராவிடன் Fபண்ட் வங்கியில் சேர்க்காத நல்ல மிஷனரி ஸதாபனங்கள் பற்றி எழுதினேன்.

சகோ. பாலாசீர் லாரியின் **விழுகை** விபரம் **நானே** இயேசு– **நானே** நாராயணன் **– நானே** அல்லா என்று கூறி பிசாசின் தோழனாய் மாறி மரித்ததை குறித்து எழுதினேன்.

1) ஏழாம் நாள் (சனிக்கிழமை) ஓய்வுநாள்காரர்களின் தவறான உபதேசம்

2) **எகோவா** சாட்சிகள் என்ற சபைகளின் பிசாசின் உபதேசங்கள்

3) **இரட்சன்ய** சேனை சபையின் **இரண்டு தவறான** உபதேச விமர்சனம்.

4) **கேரளாவில்** உள்ள **மார்தோமா** சபைகளின் **3 பிஷப்களின் பாவ ஜீவியத்தை** குறித்த விமர்சனம். அதன் காரணமாக **மார்தோமா சபைகளில்** எனக்கு திறக்கப்பட்ட ஊழியத்தின் வாசல்கள் மூடப்பட்டது. ஆனால் ஆயர்களும். மார்தோமா சபை மக்களும் இன்னும் என்னை நேசிக்கிறார்கள், என் ஊழியத்தை தங்குகிறார்கள்.

5) CSI சபைகளின் **மாடரேட்டர்** பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர் **K.P. யோகன்னான்** அவர்களை **பிஷப்பாக** அபிஷேகம் செய்தது. அதற்கு அவர் வாங்கிய **லஞ்ஜ** தொகைகளின் விவரம். K.P. யோகன்னான் அவர்கள் பிஷப்பாக அபிஷேகம் செய்ய **5 பிஷப்புகளின்** கைவைப்பு உதவி தேவை. அப்போதுதான் அரசாங்க சட்டப்படி பிஷப் அங்கீகாரம் கிடைக்கும். அதற்காக ஒரு **பிஷப்புக்கு** மட்டும் **12 கோடியும்,** மற்றொரு **தமிழ்நாடு** பிஷப்புக்கு **ஒரு கோடியும்,** வடஇந்திய CNI சபைகளின் பிஷப்மார்களில் **இரண்டு பிஷப்மார்களுக்கு** பல லட்சங்கள்

பணம் கொடுத்து அவர்களை கேரளாவுக்கு அழைத்து வந்து CNI சபை பிஷப்புகளான அவர்கள் இருவரும் மற்ற CSI பிஷப்மாரோடு சேர்ந்து பாஸ்டர் K.P.யோகன்னான் தலைமீது கைகளை வைத்து **பிஷப்பாக** அபிஷேகம் செய்த விவரங்களை **புகைப்பட ஆதாரத்துடன்** ஜாமக்காரனில் வெளியிட்டு **CSI மாடரேட்டரின்** இந்த ஏற்பாடுகள் CSI சபைகளுக்கு **மாடரேட்டர்** செய்த துரோகம் என்று எழுதினேன். மேலும் மாடரேட்டரே **பணம் லஞ்ஜமாக** பெற்று மற்ற பிஷப்மார்களுக்கும் வாங்கிக்கொடுத்த CSI **மாடரேட்டரின் சாட்சியில்லா** அந்த செயலை என் தனிப்பட்ட சார்பலும், **CSI சபைகளின்** சார்பிலும் நான் கண்டித்து எழுதியது.

6. பிஷப் K.P. யோகண்ணான் அவர்கள் பெந்தேகோஸ்தே உபதேசத்தை கைவிட்டு **கத்தோலிக்கர்கள்போல ஆர்த்தடாக்ஸ்** சபைகளின் **புதிய உபதேச** பிரச்சனை களின் விவரங்களைப்பற்றிய விமர்சனம். அதன் காரணமாக அவரின் சபை மக்கள் பல இடங்களில் சபையைவிட்டு விலகிய விபரம் எழுதனேன்.

7. பிஷப் துரை (கோயமுத்தூர் CSI டையோசிஸ்) அவர்களின் ஊழல்கள், பிஷப் அவர்களின் **பதவி நீக்கம்.** CSI சபைகளில் **பிஷப் பதவியிலிருந்து** CSI சினாட் **நீக்கிய விவரம்** CSI சபைகளின் சரித்திரத்தில முதல் சம்பவம் ஆகும். அவர் ஜெயலுக்கு அனுப்பப்பட்ட திரும்பியதும், அதன் காரணமாக பிஷப் துறை அவர்கள் யாருக்கெல்லாம் பட்டம் கொடுத்து ஆயர் ஆக்கினாரோ அந்த ஆயர்களின் பெரும்பலோர் என்னை வெறுத்தனர். ஈரோட ஆயர்கள் சிலரும் என்னை வெருத்தனர்.

8. CSI **சினாட்** சென்னை **தலைமை அலுவலக்திலேயே** வெளி நாடுகளிலிருந்து **சுனாமி** உதவிக்காக கிடைத்த பல கோடிகளை கொள்ளையடித்த விவரங்களை எழுதனேன்.

9. CSI **சினாட்** தலைமை அலுவலகத்தில் உள்ள CSI **சினாட் செயலர்,** அவர் **மகள்** இன்னும் சிலரும் **ஜெயிலில் அடைக்கப்ட்டது.** CSI சினாட் என்ற CSI சபைகளின் **தலைமையிலேயே** இப்படி பெரும் **பண ஊழல்** நிறைந்துள்ளதையும் அந்த ஊழலில் அகப்பட்ட **பிஷப்மார்களின்** பெயர்களையும் ஜாமக்காரனில் வெளியிட்டேன். முன்னாள் பிஷப்பின் மகளும் இந்த பெரும் கொள்ளையில் அகப்பட்டார். 24 CSI டையோசிஸ்களின் தலைமை சினாடில் இத்தனை பெரிய ஊழல் செய்தால் மற்ற டையோசிஸ்களின் தவறை விசாரித்து தண்டனை கொடுக்க முடியுமா? அத்தனை பணங்களும் CSI ஜனங்களின் உழைப்பின் காணிக்கையை கர்த்தருக்கொன்று கொடுத்ததை இவர்கள் திருடலாமா? சபை மக்களுக்கு இந்த ஊழல் விஷயங்கள் தெரியுமா? அதை நான் ஜாமக்காரனில் வெளிட்டது தவறா?

10. கோயமுத்தூர் டையோசிஸ் பிஷப்பும், மாடரேட்டருமாய் பதவி வகித்த வில்லியம் மோசஸ் அவர்களைப்பற்றி பத்திரிகைகளில் வெளிவந்த சாட்சியில்லா விஷயங்களையும் அதன் விவரங்களை ஜாமக்காரனில் விமர்சித்து எழுதினேன். இப்படி எழுத்தப்பட்டதால் அந்த குறிப்பிட்ட பிஷப் என்னை இஷ்டப்படுவாரா? அவருடை வெறுப்பையும் நான் சம்பாதித்தேன்.

## மிகப் பெரிய கொள்ளையர்

11. CSI **மாடரேட்டரும்** ஆந்திர மாநில **பிஷப்புமான** Most Rev. **சுகந்தர்** அவர்கள் காலத்தில்தான் பிஷப்மார்கள் மிக அதிகமான வலைக்கு வாங்கப்பட்டார்கள். இரண்டு CSI **பிஷப்புகளை** டையோசிஸ்ஸில் நியமிக்க 1.25 கோடி வீதம் இரண்டு CSI **டையோசிஸ் நிர்வாகளிடம்** வங்கினார். அவர் வாங்கிய **ரொக்க பணம்** மிக அதிகம், அவற்றோடு **தங்க செயின்,** மாடரேட்டரின் பேரன் பெயரில் கொடுக்கப்பட்ட **தங்க அரைஞான் கொடி** ஆகியவை தமிழ்நாட்டிலிருந்து லஞ்ஜமாக பெற்றார். **ஆந்திராவிலும்,** கர்னாடகாவிலும் அந்த மாடரேட்டர் லஞ்ஜமாக வாங்கிய **கோடிகளுக்கு** அளவில்லை. அதற்கான ஆதாரமும் என்கையில் இல்லை.

அதே மாடரேட்டர்அவர்கள் ஆந்திராவில் **மெடிக்கல் காலேஜ் கட்ட டையோசிஸ்** மூலம் CSI டையோசிஸ் **சபை மக்களிடம்** சேகரித்த **கோடிகள்** ஏராளம். அதற்கான ரசீதோ, கணக்கோ இல்லை. அனால் அத்தனையும் ஒரு நாள் **அரசாங்க உளவு துறையால்** கண்டுபிடிக்கப்பட்டு அத்தனை பணத்தையும் அரசாங்கம் பிடிங்கிக்கொண்டுபோனது. **டையோசிஸ்ஸின் சொந்த நிலமான மெடிக்கல்** காலேஜ் நிலத்தையும் அந்த மாடரேட்டர் இரகசியமாக ஒரு பாகத்தை விற்றுவிட்டதாக வந்த தகவலும் ஜாமக்காரனில் அறிவித்தேன். அந்த மாடரேட்டரும் **ஜெயிலுக்கு** போய் திரும்பி வந்தார். இருதய வியாதியால் அவதிப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். மக்கள் கண்ணீரோடு கர்த்தருக்கென்று இட்ட காணிக்கையில் கை வைத்தவர்களின் முடிவை பாருங்கள்.

12. CSI மாடரேட்டரும் கன்னியாகுமரி CSI டையோசிஸ்ஸின் பிஷப்புமான ஓய்வுபெற்ற மாடரேட்டர் **தேவ கடாச்சம்** அவர்கள் காலத்தில் ஒரு டையோசிஸ்க்கு **பிஷப்மார்களை** நியமிக்க அந்தந்த டையோசிஸ்கள் அவர் பெயரில் கொடுத்த **லஞ்ஜ பண** விவரங்களையும் ஜாமக்காரனில் எழுத வேண்டிவந்தது. அந்த டையோசிஸ் மக்களும், ஆயர்களும் அவர் ஊழலை அறிந்திருந்தபடியால் கன்னியாகுமரி டையோசிஸ் ஆயர்களும் மக்களும் என்னை வெருக்கவில்லை, தொடர்ந்து தங்கள் சபைகளில் என்னை உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள். என் ஊழியத்துக்கும் ஏராளமான உதவிகள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

13. **திருநெல்வேலி** பிஷப் Rt. Rev. **ஜெயபால் டேவிட்** அவர்கள் தாக்கப்பட்டதையும், சிலர் **பிஷப்** அவர்கள் **கன்னத்தில் அறைந்த** காட்சியும். **பிஷப்** அவர்களின் அங்கி **கிழிக்கப்பட்ட** காட்சியும் **பாளையம்கோட்டை** CSI ஊசி கோபுர சபையில் நிகழ்ந்த அந்த துக்ககரமான சம்பவம் முழு CSIக்கும் அவமானம் தரும் காட்சிகள் ஆகும். அன்றைய அனைத்து தினசரி பத்திரிகைகளிலும் அதன் புகைப்படங்களும் வெளிவந்தது. சம்பவத்தின் **உண்மை நிலையை** நானும் என் நெல்லை CSI வாசகர்களுக்காக ஜாமக்காரனில் வெளியிட்டேன்.

14. **தூத்துக்குடி –** நாசரேத் CSI **டையோசிஸ்ஸீல்** பிஷப் **ஜெப சந்திரன்** அவர்களின் தவறான தெடர்புகள். அவர் காலத்தில் டையோசிஸ்ஸில் நடந்த கோடிக்கணக்கான **பண கையாடல்கள்** CSI சினாட் **பிஷப் அவர்களை தண்டித்தது** அதை தொடர்ந்து CSI **சினாட்** கூட்டத்தில் தென் இந்தியாவின் 24 டையோசிஸ் **பிஷப்மார் கூடிய கூட்டத்தில்** மாடரேட்டர் **அங்கியை** பிஷப் ஜெப சந்திரன் அவர்கள் பிடித்து ஏசியதும், மாடரேட்டர் மேஜையின் முன் பிஷப் அவர்கள் **தரையில் அமர்ந்து தர்னா** செய்தது. புகைப்படத்துடன் என் வாசகர்களின் ஜெபத்துக்காக விமர்சனம் செய்து வெளியிட்டேன்.

15. **திருநெல்வேலி** CSI பிஷப் **JJ கிறிஸ்துதாஸ்** அவர்கள் பிஷப்மார்களின் **ஓய்வு வயதை** 67 ஆக்கி அதை கமிட்டி தீர்மானிக்குமுன் அன்று கூடிய கூட்டத்தில் நடந்த அடிதடி கலாட்டாவில் மேடையில் பிஷப்பின் மைக் பிடுங்கப்பட்ட நிலையில் **தீர்மானம் ஏகமனதாக** நிறைவேற்றப்பட்டது என்று வாய்மொழியில் பொய்யாய் கூற, மேடையில் இருந்த **பிஷப்பை** அப்படியே தள்ளிகொண்டு வந்து **போலீஸ் பாதுகாப்புடன்** வெளியே கொண்டுபோய்விடப்பட்டார். அன்று நடந்த சம்பவத்தின் காரணங்களையும் பிஷப் அவர்கள் தவறாக எடுத்த தீர்மான விவரங்களையும் ஜாமக்காரனில் எழுதினேன்.

16. திருநெல்வேலி CSI டையோசிஸ் பிரச்சனைகள் முற்றி **தென் இந்தியாவிலேயே** மிக அதிக எண்ணிக்கையுள்ள CSI ஆலயங்கள் நிறைந்தும் **ஆசியாவிலேயே** பிரசித்தி பெற்றதுமான **CSI திருநெல்வேலி டையோசிஸ்** மட்டும் இந்தியாவிலேயே **முதலாவதாக CSI சினாட்டிலிருந்து** தனியாக**பிரிந்து உடைந்து** TDTA **திருநெல்வேலி டையோசிஸ் டிரஸ்ட் ஆசோசியேஷன்** என்ற பெயரில் தன்னை தனியாக அடையாளப்படுத்திக்கொண்ட வரலாற்றையும் எழுதினேன். திருநெல்வேலியில் ஒவ்வொரு ஆலயத்தின் முகப்பில் இருந்த CSI என்ற எழுத்துக்களை நீக்கி அதற்கு பதிலாக TDTA டையோசிஸ் என்று எழுதி அழைக்கப்படலாயிற்று. அந்த சூழ்நிலையில்

முதன் முதலாக CSI **உடைந்த கதையும்** CSIயின் **ஆரம்ப வரலாற்றையும்** வீழ்ச்சியையும் ஜாமக்காரனில் எழுதினேன்.

17. **வடக்கு கேரளா** CSI டையோசிஸ் பிஷப் K.P. **குருவில்லா** அவர்கள் கேரளாவில் **மூனாறு** CSI நிலத்தில் உள்ள **தேக்கு மரங்களை** வாய்தாபோன வன அதிகாரியின் அனுமதிக் கடிதத்தை வைத்துக்கொண்டு அதில் அனுமதிக்கப்பட்ட அளவுக்குமேல் **அதிக மரங்களை** வெட்டி விற்றதற்காக **பிஷப்** அவர்கள் **நீதிமன்றத்தில்** நிறுத்தப்பட்டார். டையோசிஸ் அலுவலகத்தில் **சிலர் செய்த பெரும் பண ஊழலுக்கு** பிஷப் அவர்கள் குற்றவாளியாக பிடிப்பட வேண்டியதாயிற்று. **பல லட்சங்கள் அபராதம்** விதிக்கப்பட்டு **நீதிமன்றத்தால்** பிஷப் அவர்கள் எச்சரிக்கப்பட்டு, கண்டிக்கப்பட்டார். இவைகள் எல்லாம் அவர் மனதை மிகவும் பாதிக்க அவர் தன் **ஓய்வு காலத்துக்கு** முன்னதாக **ஸ்ட்ரோக்** உண்டாகி **படுத்தபடுக்கையில்** வீழ்ந்துவிட்டார். இனி அவரால் **பிஷப் பதவியில்** நீடிக்க இயலாது என்று உறுதியானதால் **புதிய பிஷப்** தெரிந்தெடுக்கப்பட்டார். இந்த விவரங்களையும் ஜாமக்காரனில் வெளியிட்டேன்.

18. CSI **பிஷப் எலக்ஷன்** தேர்தலில் ஓட்டு எண்ணிகயையில் **முதலாவதாக** வந்த நபரை **பிஷப்பாக** தெரிந்தெடுக்காமல் 3வதாக அல்லது நான்காவதாக ஓட்டு எண்ணிக்கை பெற்றவரை **பணம்** அல்லது **செல்வாக்கு** காரணமாக தோற்ற ஆயரைகூட **பிஷப்பாக** தெரிந்தெடுக்கப்படுவதைக்குறித்து **ஜாமக்காரனில்** விமர்சித்து எழுதினேன். இந்த தவறு தொடருமானால் **பிஷப் எலக்ஷனே** தேவையில்லையே? எதற்காக எலக்ஷன் வைக்கிறார்கள்? என்றும் எழுதினேன். அதன் காரணமாக பல **பிஷப்மார் – மாடரேட்டர்களின்** வெறுப்புக்கு ஆளாளேன்.

19. **தெற்கு கேரள** CSI டையோசிஸ் பிஷப் Rt. Rev. **அமிர்தம்** அவர்களின் **நவீன உபதேசத்தை** பற்றியும் அது வேத வசனத்துக்கு விரோதமானது என்றும் எழுதினேன்.

**ஓணம்** கேரள இந்து மதத்தினரின் பண்டிகையை ஆகும். ஆனால் பிஷப் அவர்கள் அது கேரள **கலாச்சார பண்டிகை** ஆகவே அதை **CSI சபையில் ஆராதனையில்** கிறிஸ்துமஸ் போல கொண்டாடலாம் என்று அறிவித்தார். மேலும் ஆராதனையில் வாசிக்கப்படும் **முதல் வேத பாடம்** இரண்டாவது வேத பாடம் ஆகியவற்றோடு **கீதை** புஸ்தகத்திலிருந்து ஒருபாகம் ஆராதனையில் வேத பாடமாக வாசிப்பது நல்லது என்றார். இவைகளை அந்த டையோசிஸ் ஆயர்களும், சபை மக்களும் எனக்கு அறிவித்தார்கள்.

CSI டையோசிஸ் முழுவதும் உள்ள **ஆயர்களும், சபை கமிட்டிகளும்** அந்த கட்டளையை

எதிர்த்து சபை கமிட்டியில் மினிட் புத்தகத்தில் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்து அந்த விவரத்தை CSI **மாடரேட்டருக்கும்,** பிஷப் அவர்களுக்கும் எழுதி தங்கள் **எதிர்ப்பை** தெரிவிக்க சொல்லி **ஜாமக்காரனில்** எழுதினேன். அப்படியே டையோசிஸ் ஆயர்களும் சபை மக்களும் எழுதி அனுப்பினர். உடனே அந்த அறிக்கையை பிஷப் அவர்கள் திரும்ப பெற்றார்.

20. CSIக்கு புது **மாடரேட்டராக** மத்திய கேரளா CSI டையோசிஸ் **பிஷப்** அவர்கள் Rt. Rev. **உம்மன் ஜார்ஜ்** அவர்கள் பதவிஏற்றார். இவரும் ஒரு **நவீன உபதேசத்தை** 24 CSI டையோசிஸ்க்கும் **லெந்து கால தியான ஜெப அறிக்கை** என்ற பெயரில் வெளியிட்டார். அதில் இயற்கை படைப்புகளில் **தெய்வத்தை பார்க்கவேண்டும். ஆலிகள்,** (அரவாணிகள்) **லெஸ்பியன்கள்** ஆகிய **3வது பாலின** மக்களுக்கு சபையில் **நிர்வாக பணியும்** ஊழியத்தில் அவர்களுக்கு பங்கும் கொடுக்க வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டார்.

CSI **மாடரேட்டரின்** அந்த **கட்டளைக்கு** எந்த டையோசிஸ்ஸும் **கீழ்படிய கூடாது** என்றும் **3வது பாலினத்தவர்க்கு** சபையில் **நிர்வாக பொறுப்பு** கொடுத்தால் நம் சபையின் **வாலிப பிள்ளைகளுக்கு** ஆபத்து என்று எழுதினேன். அதே சமயம் **3வது பாலினத்தவரை** கடவுள் வெருக்கவில்லை. அவர்கள் **மனம் திரும்பினால்** அவர்களுக்கும் பரலோக ராஜ்யத்தில் பங்கு உண்டு என்றும் எழுதினேன்.

### 21. CSI சரித்திரத்தில் நுழைக்க இருந்த மிக ஆபத்தான நவீன உபதேசம்.

அனேக ஆண்டுகளுக்கு முன் CSI சினாட் கவுண்சில் கூட்டம் நடந்தது. அனைத்து 24 டையோசிஸ் பிஷப்மார்களும், ஆயர்களும் கூடியிருந்த கூட்டத்தில் **ஆராதனை முறைமை** என்ற பெயரில் CSI சபைகளுக்குள் நுழைய இருந்த ஆபத்தை தடுத்து நிறுத்த கர்த்தர் என்னை பயன்படுத்தினார்.

ஆராதனை முறைமை என்று அச்சடிக்கப்பட்ட புஸ்தகம் எல்லாருடைய கையிலும் கொடுக்கப்பட்டது. ஆராதனை **மாடரேட்டரின்** ஜெபத்தோடு தொடங்கப்பட்டது. அடுத்து பாட்டு பிறகு **ஸ்தோத்திர ஆராதனை** அதில் வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய வரை துதிக்கிறோம் என்று வரிசையாக கூறிக்கொண்டிருக்கும்போது திடீரென்று அதிர்ச்சிதரும் வாசகம் காணப்பட்டது.

இயேசுவே உம்மை ஆராதிக்கிறோம்.

இயேசுவே நீரே **அல்லாவாக** இருக்கிறீர்

இயேசுவே நீரே **முருகனாகவும்** இருக்கிறீர்

உம்மை **தாமரை புஷ்பங்களால்** ஆராதித்து துதிக்கிறோம் என்று எழுதப்பட்டதை அத்தனை பேரும் வாசித்தனர். ஆமென் என்றும் கூறினார்கள். அவ்வளவுதான் அத்தனைபேரும் அதிர்ந்தனர். கூட்டம் முடிந்தது. **3 ஆயர்கள் ஒரு பிஷப்** ஆகிய நான்கு பேரிடமிருந்து அந்த **ஆராதனை கிரமத்தின்** போட்டோ காப்பியை எனக்கு அனுப்பி டாக்டர் ஏதாவது நடவடிக்கை CSIக்காக எடுங்கள் என்று எழுதினர்.

CSI கிறிஸ்தவ சபைகள் இனி **எல்லா மதமும்** ஒன்று, **எல்லா தெய்வமும்** ஒன்று என்ற பிசாசின் கொள்கைக்குள் கொண்டுவர CSIயின் சில **பெரிய தலைகள்** செய்த முயற்சிதான் இது! உடனே ஜாமக்காரனில் அப்படியே காப்பி எடுத்து இந்தியா, உலகமனைத்திலும் உள்ள CSI கிறிஸ்தவர்களுக்கு விசேஷ அறிக்கை அனுப்பி அனைத்து திருமண்டலங்களில் உள்ள CSI ஆயர்கள், சபை மக்கள் இந்த உபதேசத்தை நாங்கள் எதிர்க்கிறோம். இது CSI ஆராதனை முறைமைக்குள் எழுதப்பட்டு ஆலய ஆராதனையில் உபயோகிக்கக்கூடாது என்று சபையாகவும், தனி நபராகவும் எழுதி சினாட்டுக்கும், மாடரேட்டருக்கும். பிஷப்மார்களுக்கும் அனுப்பும்படி அறிக்கை அனுப்பினேன்.

CSI சினாட் தலைமை அலுவலகத்தில் ஆயிரக்கணக்கான எதிர்ப்பு கடிதங்கள் குவிந்தன. ஒரு வழியாக அந்த உபதேசத்தை CSIக்குள் கொண்டுவர மாட்டோம். அந்த தவறான ஆராதனை வார்த்தைகள் **எப்படி சினாட் கூட்டத்தில்** வினியோகிக்கப்பட்டது என்று விசாரிப்பதாக பதில் வந்தது.

பல டையோசிஸ்களிலிருந்து பிஷப்மாரும், ஆயர்களும், சபை மக்களும் எனக்கு நன்றி கூறி கடிதம் எழுதினார்கள். CSI சபைகளை ஆபத்தான உபதேசத்திலிருந்து காப்பாற்றினீர்கள். உடனடியாக நீங்கள் கூறியபடி நாம் நம் எதிர்ப்பை தெரிவிக்காமல் போயிருந்தால் அனைத்து **விக்கிரக தெய்வங்களை** புகழ்த்தி CSI சபைக்குள் ஆராதனை நடத்தியிருப்பார்கள் என்று எழுதினர்.

இயேசு சொன்னார் **நானே** வழி, **நானே** சத்தியம், **நானே** ஜீவன், **நானே** வாசல். இந்த **வாசல் வழியல்லாமல்** ஒருவனும் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது. என்று திட்டவட்டமாக இயேசுகிறிஸ்து கூறியிருக்கும்போது சில **அந்தி கிறிஸ்துவின்** ஆட்கள், **பிஷப்மார்கள், ஆயர்கள்** வேஷத்தில் சபைக்குள் புகுந்து இப்படிப்பட்ட **விஷத்தை** கலக்க முயற்சிக்கிறார்கள். இப்போதும் முயன்றுகொண்டிருக்கிறார்கள். கடந்த வருடம் நமது CSIயில் இப்போதுள்ள மாடரேட்டர் Most Rev. உம்மன் ஜார்ஜ் அவர்கள் அனைத்து மதத்தினரையும் கிறிஸ்தவர்கள் ஒதுக்க கூடாது, **ஆண் புணர்ச்சிகாரர்களை** ஒதுக்க கூடாது அவர்களுக்கு நம் சபையில் **பொருப்புகள்** கொடுக்கவேண்டும் என்று கூறியதையும் நான் அதை எதிர்த்து எழுதியதையும் நீங்கள் வாசித்திருப்பீர்கள்.

(இயேசுவாலன்றி) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் **மனுஷருக்குள்ளே** அவருடைய (இயேசு) என்ற நாமமே அல்லாமல் வேறொரு நாமம் இரட்சிக்கப்பட கட்டளையிடப்படவில்லை. அப். 4:12 ஏறக்குறைய அனைவரும் என்னை வெருத்தார்கள். தென் இந்தியாவிலுள்ள அனைத்து பிஷப்மாரிடமும் நம் CSI **மாடரேட்டர்** அவர்கள், டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் பிஷப்மாரை மிகவும் அவமானப்படுத்தி எழுதிகிறார். அவர் பிஷப்மார்களையே குறி வைத்து தாக்குகிறார். ஆகவே அவரை CSI சபைகளில் ஊக்கப்படுத்த கூடாது என்று எழுதப்படாத அறிவிப்பை அறிவித்ததாக கேள்விப்பட்டேன்.

குற்றம் செய்தவர்கள் தவறு செய்தவர்க்கு மட்டுமே என் மேல் வெருப்பு உண்டாகும்.

மேலே நான் ஜாமக்காரனில் **விமரிசித்தும், தாக்கியும்** எழுதியவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு. இந்த **ஜாமக்காரனில்** குறிப்பிடாத நபர்கள், **ஊழியர்கள்,** பிஷப்மார்களின் எண்ணிக்கை இன்னும் அதிகம் உண்டு.

**ஜாமக்காரன்: இந்தியாவில் ஊழியர்கள், ஸ்தாபனங்களை பலவித சபை ஊழியர்கள், பிஷப்மார், மாடரேட்டர் ஆகிய அனைவருடைய வெருப்புக்குள்ளானேன். இப்போது அன்னிய பாஷையைபற்றியும் பெந்தேகோஸ்தே சபைகளின் தவறான உபதேசங்களைப்பற்றியும் எழுதி எல்லா பெந்தேகோஸ்தே சபையினரின் வெருப்பையும் சம்பாதித்துவிட்டேன். என்னை வெருக்க வேண்டியவர்கள் இன்னும் பாக்கி யாரும் இல்லை என்று நினைக்கிறேன். இப்படி எல்லாராலும் வெருக்கப்பட்ட என்னைப்போன்ற ஊழியரை வாசிக்கிறவர்கள் கண்டதுண்டா ?**

*என் **ஆண்டவராகிய இயேசுவும்,** என் **வாசகர்களில் சிலரும்** என்னை வெருக்கவில்லை என்பதை நான் அறிவேன் **அதுவே எனக்கு போதும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்***

**என்னைப்பற்றியும் என் ஊழியம் பற்றியும் நீங்கள் அறிய வேண்டும்.**

# கர்த்தர் எனக்கு கொடுத்த 3 முக்கியமான ஊழியங்கள்

1) இயேசுவை அறியாத **ஆதிவாசி மக்களுக்கு** சுவிசேஷம் அறிவிப்பது. அதை நான் என் மருத்துவ துறை மூலமாக மருத்துவ முகாம்கள் நடத்தி இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் **மாதம் ஒரு வாரம் முழுவதும்** காட்டுக்குள் தங்கி **ஆதிவாசி கிராமங்களை** நாங்கள் ஒரு குழுவாக இணைந்து அவர்களை சந்தித்து சுவிசேஷம் அறிவித்து வருகிறேன்.

2) சபைகள் இன்றைக்கு **பரவச உபதேசத்தில்** கவரப்பட்டு அதை நோக்கி பயனிக்கின்றன. ஆகவே **மாதத்தில் 3 வாரங்கள்** என்னை அழைக்கும் **சபைகளில் கன்வென்ஷன்** மூலமாக சபைமக்களை **வசனத்துக்குநேராக** திசைதிருப்பி, குடும்ப ஆலோசனை களையும் அவர்களுக்கு அறிவித்து வருகிறேன்.

இன்று எல்லா சபைகளலும் **பிரசங்கம்** உண்டு. (Preaching) உண்டு. ஆனால் (Teaching) இல்லை. வேத பாட விளக்கம் கூற **ஆட்கள் இல்லை.** ஆகவே என் கூட்டங்களில் ஒவ்வாரு நாள் மாலை செய்தியும் **பிரசங்கமாக** இல்லாமல் **வேத பாட வகுப்பாக** அமைந்திருக்கும். வசனத்தை அறிய வாஞ்ஜிக்கும் **ஒரு கூட்ட மக்கள்** எல்லா சபைகளிலும் உண்டு. அப்படி **வாஞ்ஜை உள்ளவர்கள்தான்** என்னை அழைத்து **கூட்ட ஏற்பாடுகளை** செய்கிறார்கள்.

3) **ஜாமக்காரன் பத்திரிகை ஊழியம்** இது மிக முக்கியமானதும் மிகவும் **ஆபத்தானதுமாகும்.** கர்த்தர் இதை ஏன் என் கையில் ஒப்படைத்தார் என்று பலர் என்னிடம் கேட்கிறார்கள். **பத்திரிகையில்** எல்லாரையும் குற்றம் கூறி – குறைகளை சுட்டிக்காட்டி எழுதுவதால் உங்களுக்கு என்ன லாபம்? எந்த **ஊழியரோ,** எந்த **பிஷப்போ,** எந்த **சபையோ** தவறு செய்தால் அதை விசாரிக்க **நியாயம் தீர்க்க** கர்த்தர் இருக்கிறார். மற்ற ஊழியர்கள் எந்த தவறு அல்லது **ஊழல்** அல்லது **பாவம் செய்தால்** உங்களுக்கு என்ன?

**நின்றாலும் – விழுந்தாலும்** அவர்கள் **கர்த்தருக்கு கணக்கு** ஒப்புவிப்பார்கள் – அதனால் உங்களுக்கென்ன? என்கிறார்கள்.

லேவி 5:1 அப் 4:20 எசே 3:20 இந்த வசனங்களை வாசித்துப்பாருங்கள்.

சபையை பற்றியும், வாசகர்களுக்கு ஏற்பட்ட உபதேச குழப்பங்கள் பற்றியும், வாசகர்களுக்கு ஏன் அறிவிக்கவில்லை என்று கர்த்தர் என்னிடம்தான் கணக்கு கேட்பார். அறிவித்தாயா ? – எச்சரித்தாயா ?

**ஜாமக்ககாரன்** என்ற பெயரையும் கர்த்தர் ஒரு திட்டத்தோடுதான் என் பத்திரிகைக்கு கொடுத்தார் என்று உணருகிறேன். வேத வசனத்தின்படி ஜாமக்காரனுக்கு இரண்டு வேலை

1) ஜாமக்காரன் **காவல் கோபுரத்தில்** நின்று தூரத்திலிருந்து வரும் **சத்துருக்கள்.** எதிரிகளை குறித்து **நாட்டு மக்களுக்கு** அறிவிக்க வேண்டும்.

2) ஜாமக்காரன் **கோபுரத்திலிருந்தபடியே** கீழே **நாட்டு மக்களையும்** அவர்களின் **தவறுகளையும்** காண முடியும் அவைகளையும் அறிந்து நாட்டுமக்களை எச்சரிக்க வேண்டும்.

## இந்த இரண்டு வேலைக்காகவே கர்த்தர் ஜாமக்காரன் என்ற பெயரை தந்து பத்திரிக்கை ஊழியத்தை தொடங்கி வைத்தார்.

**எச்சரிப்பது – அறிவிப்பது** இந்த இரண்டு வேலைகளை ஜாமக்காரன் பத்திரிகை மூலமாக செய்கிறேன். இப்பத்திரிகை எல்லாரும் வாசிக்கும் பத்திரிகை அல்ல. என் **வாசகர்களுக்காகவே** – வாசகர்களால் நடக்கும் பத்திரிக்கை ஆகும். வாசகர்களை எச்சரித்து – அவர்களுக்கு **சரியான உபதேசத்தை** கூறுவது. தவறான ஊழியர்கள் யார் ? **எது சரியான ஊழியம்** ஆகியவற்றை என் வாசகர்களுக்கு மட்டும் எழுகிறேன்.

ஒன்றை புரிந்துகொள்ளுங்கள். யார் என்னை வெறுத்தாலும் எனக்கு பணம் அனுப்பினாலும் சரி, அனுப்பாமல் போனாலும் சரி.

என் **வாசகர்களை பாதிக்கும்** எந்த தவறான உபதேசத்தையும் ஜாமக்காரன் மூலம் சுட்டிக்காட்டுவேன். CSI, லூத்தரன், மார்தோமா, பெந்தேகோஸ்தே போன்ற அனைத்து சபைகளிலும் என் ஜாமக்காரன் வாசகர்கள் இருக்கிறார்கள். என் வாசகர்களை பாதிக்கும் பிஷப்மார்களின் சாட்சிகெட்ட ஜீவியமோ, சபைகளில் நடக்கும் ஊழல்களோ எதெல்லாம் என்

வாசகர்களை பாதித்தாலும் தனிப்பட்ட ஊழியக்காரர்களால் வாசகர்கள் பாதிக்கப்பட்டாலும் அவர்களைப்பற்றி வசனத்தின் அடிப்படையில் தொடர்ந்து ஜாமக்காரனில் என் மரணம்வரை எழுதி அறிவித்துக்கொண்டேதான் இருப்பேன். கர்த்தர் எனக்கு தந்த வாசகர்களில் ஆவிக்குரிய ஜீவியத்தை பற்றியும் வாசகர்களுக்கு ஏற்பட்ட உபதேச குழப்பங்கள் பற்றியும் கர்த்தர் என்னிடம்தான் கணக்கு கேட்பார். **அறிவித்தாயா? எச்சரித்தாயா?**

முந்தின பக்கங்களில் பல ஊழியக்காரர்களைப்பற்றியும். பல சபைகளின் தவறான உபதேசங்களைப் பற்றியும், ஊழல் செய்த பிஷப்மார். மாடரேட்டர்களை பற்றியெல்லாம் நான் எழுதியதில் **பொய்யான தகவல்கள்** எதுவும் இல்லை. **யாரையும் அவமானப்படுத்தும்** நோக்கத்தோடு எழுதவும் இல்லை. இவர்களில் பெரும்பாலானவர்களின் முகம்கூட நான் கண்டது இல்லை. **இவர்கள் யாரும் எனக்கோ,** என் **ஊழியத்துக்கோ** எந்த **கெடுதலும், தடையும் உண்டாக்கினதில்லை** என்றாலும் என் வாசகர்களை **தவறான உபதேசத்திலிருந்து** காப்பாற்றவும், **கர்த்தரைவிட்டு விலகின ஊழியர்களை** அவர்களுக்கு **அடையாளம்** காட்டவும், CSI **சபைகள், லூத்தரன் சபைகள்** நம் கண்முன்னே சபை பாவ துணிகரம்கொண்டு அழியப் போகிறதே! அதற்காகவே **வாசகர்களை** ஜெபிக்க ஊக்கப்படுத்தவே ஜாமக்காரனில் எழுதுகிறேன்.

இவர்களில் பெரும்பாலான **ஊழியர்கள், பிஷப்மார்** என்னைக்குறித்து பற்கலைக்கடித்து தங்கள் **வெருப்பை காட்டுகிறார்கள்.** பலவித **தடைகளை** என் ஊழியத்துக்கு **விரோதமாக** ஏற்படுத்தனாலும் என் ஊழியம் **எப்போதும்போல** வெற்றிகரமாக **நடந்துகொண்டிருக்கிறது.**

**கொல்ல நினைத்தார்கள்,** இரண்டு முறை காப்பாற்றப்பட்டேன். **கூலி படைகளை ஏவினார்கள்,** காவல் துறை மூலம், ரௌடிகள் மூலம் **பயமுறுத்தினார்கள்.** இதுவரை என் ஆண்டவர் **என்னோடும், எனக்குள்ளும்** இருந்து என்னை பாதுகாப்போடு நடத்தி **ஆயுளையும் ஆரோக்கியத்தையும்** கூட்டிக்கொடுத்து நடத்துகிறார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

எனக்காக ஜெபிப்பவர்கள் எத்தனை பேர்! தங்கள் குடும்ப ஜெபத்தில் என் புகைப்படத்தை வைத்து எனக்காக ஜெபிப்பவர்களை நான் அறிவேன். தங்கள் தனி ஜெபங்களில் எனக்காகவும். என் பாதுகாப்புகளுக்காகவும் ஜெபிக்கும் உள்ளங்களை ஏராளமாக கர்த்தர் எனக்கு கொடுத்திருக்கிறார்.

என்னை நினைத்து இப்படி ஜெபிப்பவர்கள் ஏராளம் ஏராளம். இத்தனை பேர்களின் ஜெபம் வீன்போகுமா? அந்த ஜெபங்களும் நான் செய்யும் என் ஜெபமும் எனக்கு அறனாக இருக்கிறது. எனக்காக ஜெபிப்பவர்களுக்கும் நான் கேட்காமலேயே எனக்கு காணிக்கை அனுப்பி உதவுபவர்களுக்கும் அனுப்பிய பணத்திற்கு ரசீதைகூட எதிர்பார்க்காமல் தொடர்ந்து காணிக்கை அனுப்பி இந்த ஊழியத்தை தாங்கிகொண்டிருக்கிறார்கள்! அவர்கள் எல்லாருக்கும் என் மனமார்ந்த நன்றியை கூறிகிறேன். அவர்களுக்காக என் தெய்வத்தை துதிக்கிறேன்.

ஜாமக்காரன் : கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவன் என்று எண்ணி இந்த வித்தியாசமான ஜாமக்காரனின் ஆபத்தான ஊழியத்துக்கு என்னை ஏற்படுத்தியபடியால் அவரை ஸ்தோத்தரிக்கிறேன். 1 தீமோ 1:12

இந்த என் சொந்த ஊழியத்தின் ஆழமான விவரங்களை ஏன் எழுதினேன் என்றால் இதுவரை ஏறக்குறைய எல்லா ஊழியரையும் பிஷப்மார்களையும் மாடரேட்டரையும் பகைத்துக்கொண்டேன்.

இப்போது கொஞ்ஜமாவது என்னையும் என் ஊழியத்தையும் தாங்குகிறவர்களும், எனக்காக ஜெபிக்கிறவர்களும் எல்லா சபைகளிலும் இருந்தாலும் என்னை மற்ற சபையினரை போல நேசிப்பவர்களும், என் ஊழியத்தை காணிக்கைகளால் தாங்குகிறவர்களும் எல்லா பெந்தேகோஸ்தே சபைகளிலும் எனக்கு உண்டு. இப்போது அன்னிய பாஷை குழப்பத்தை குறித்து ஜாமக்காரனில் எழுதிய கட்டுரையில் உபயோகித்த சில கடுமையான வார்த்தைகளால் மிகவும் காயப்பட்டிருப்பார்கள். அப்படிப்பட்ட அத்தனை பெந்தேகோஸ்தே சபையினரும் என்னை மிகவும் வெருப்பார்கள் என்பதை அறிவேன்.

இப்படி எழுவதால் நான் அவர்களிடம் மன்னிப்பு கேட்கப் போவதாக நினைக்க வேண்டாம். காரணம் நான் தவறாக எழுதியிருந்தால் அல்லவா மன்னிப்பு கேட்க வேண்டும். ஆகவே பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள் விசுவாசிகளோடு கேட்டுக்கொள்வது என்னவென்றால் அன்னிய பாஷை விஷயத்தில் மற்றவர்களின் அனுபவங்களை பின்பற்றாதபடி – வசனத்தின் அடிப்படையிலும், உங்கள் பாஷையை நீங்களே பரிசோதனை செய்து பார்ப்பதின் மூலமாக நீங்கள் மாயையிலிருந்து ஒளியின் தூதனின் ஞானமுள்ள பரிசுத்தாவியானவர் போல உள்ள காட்சிகளையும் சப்தங்களையும் சரீரத்தில் உண்டாகும் தற்கால பரவசத்தில் மூழ்கிவிடாதபடி நீங்கள உங்கள் அன்னிய பாஷையை பரிசோதித்து பாருங்கள்.

சரியான வசன பாதையில் ஆவியானவரே வாசகர்களாகிய உங்களை வழி நடத்துவாராக !

BANK ACCOUNT NUMBERS:

Dr. M.G.E. PUSHPARAJ

SALEM -636 005. INDIA

**STATE BANK OF INDIA** (SALEM-1970)

**A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB637- 10764116842

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

**A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622.

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.

# நீதியுள்ள நியாதிபதி வருகிறார் – அயோதி தீர்ப்பு

கடந்த மாத ஜாமக்காரனில் இந்தியாவை ஆளும் காவி கட்சி இந்தியாவின் அனைத்து **தலைமை நிர்வாக** துறைகளையும் தன் கட்டுப்பாட்டில் குறிப்பாக **இந்திய ஜனாதிபதி** அவர்களின் நேரடி நிர்வாக துறையும் வேறு யாருடைய கட்டுப்பாட்டின் கீழும் இயங்காத துறையும் குறிப்பாக **இந்திய பிரதமர்** கூட தலையிட முடியாத தனித்து இயங்கும் முக்கிய துறைகளான **ரிசர்வ் பேங்க்,** தலைமை **தேர்தல் ஆணையம், உச்ச நீதிமன்றம், CBI தலைமையகம்,** வருமான வரித்துறை போன்ற முக்கியமான உயர்ந்த அதிகாரம் பெற்ற துறைகளை **ஒரு கட்சி** தன் கட்டுப்பாட்டில கொண்டுவந்துவிட்டதாக பேசப்படுகிறது என்றால், **இந்தியாவின் தற்போதைய** நிலை மிக **ஆபத்தான வளையத்துக்குள் அகப்பட்டுவிட்டது** என்றால் அது மிகையாகாது.

உதாரணத்துக்கு ஒரு சமபவம் கூறுகிறேன். திரு. சேஷன் அவர்களை **இந்திய தலைமை தேர்தல்** ஆனையராக நியமித்தவுடன் அவர் எடுத்த நடவடிக்கைகளை **உலகநாடுகளே** ஆச்சரியததோடு கவனித்தன.

திரு. **சேஷன்** அவர்கள் பதவி ஏற்ற இரண்டாவது வாரமே அனறைய பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்கள் திரு. சேஷன் அவர்களை தனனை நேரில் வந்து பார்க்கும்படி செய்தி அனுப்பினார். திரு. சேஷன் அவர்கள் சற்றும் தயங்காமல் இந்திய சட்டப்படி **பிரதமர்தான் என்னை வந்து பார்க்க வேண்டும்.** நான் **பிரதமர் ஆணைக்கு** கட்டுப்பட்டவன் அல்ல. அதே சமயம் இந்திய ஜனாதிபதி என்னை அழைத்தால் மட்டுமே நான் நேரில் சென்று பார்க்க கடமைப்பட்டவன். ஜனாதிபதி ஒருவர்தான் **எனக்கு ஆணையிட முடியும்** என்று கூறி அனுப்பிய தைரியத்தை கண்டு மத்திய அரசாங்க அதிகாரிகள் நடுங்கிவிட்டனர். தன் அதிகாரம் என்ன? தன் அதிகாரத்தின எல்லை என்ன? என்று அறிந்துகொள்ள பதவி ஏற்று 3 நாட்கள் எந்த Fபைல்களிலும் கையெழுத்து போடவில்லை. தன் அதிகாரத்தை குறித்த சட்ட விதிகளை படிக்க அந்த 3 நாட்களை அவர் உபயோகித்தார்.

ஆனால் இப்போது **காவி கட்சி** வந்த உடனே அத்தனையும் **தலைகீழாக** மாறிபோய் குறிப்பாக **இரண்டு** நபர்கள் என்ன நினைக்கிறார்களோ, அதன்படி மேலே குறிப்பிட்ட அனைத்து உயர்மட்ட நிர்வாகங்களும் கீழ்படியும்படி தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக அறிய முடிகிறது.

இந்த **இருவரோடு** சேர்த்து முழு **காவி கட்சிகளையும்** இயக்குவது **RSS** என்ற இந்துமத **இயக்கமாகும்.** 1925ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த **RSS** என்ற இயக்கம் தொடங்கிய அன்றே இந்தியா முழுவதையும் **இந்துத்வா** நாடாக மாற்ற வேண்டும் என்ற தீர்மானத்தோடு தன் இரகசிய திட்டத்தின் முதல் வேலையாக ஒரு கொலையில் ஆரம்பித்தார்கள். முதல் கொலையாக தங்கள் **இந்துத்துவா** திட்டத்தை செயல்படுத்ததேச தந்தையான மகாத்மா காந்தி அவர்கள் தடையாக இருப்பார் என்பதை உணர்ந்ததால் RSS தொன்டனான **கோட்சேயை** கொண்டு **காந்தி** அவர்களை சுட்டுக்கொன்று தன் **முதல் திட்டத்தை** நிறைவேற்றி முடித்தார்கள். ஆகவேதான் RSS ஒரு **இந்து தீவிரவாத இயக்கம்** என்று குறிப்பிட்டு பிற்காலத்தில் இந்திய அரசாங்கம் RSS இயக்கத்தை தடை செய்தது.

அந்த இயக்கத்தில உள்ளவர்கள் எல்லாம் உயர் குலத்தை சேர்ந்தவர்களாகவே இருந்தார்கள். திரு. **மோடி** அவர்கள் டீ கடையில் வேலை பார்த்த சாதாரணமானவர் என்றுதான் வெளியில் அறிமுகப்படுத்தப்பட்டார். ஆனால் அவர் உயர் குலத்தை சேர்ந்தவர் என்ற விவரம் தற்போதுதான் வெளியானது.

RSS இயக்கத்தின் இரண்டாவது பெரிய திட்டம்தான் **ராம ஜென்ம பூமி** விவகாரம் ஆகும். அங்கு **ராமர்** கோவில் கட்ட வேண்டுமானால் இவர்களின் பரம எதிரிகளான **முகமதியர்களின் பாபரி மஜீத்தை** இடிப்பது ஆகும்.

அன்றைய ஆட்சி பீடத்தில் காங்கிரஸ் கட்சி ஆண்டு கொண்டிருந்தது. ஒரு குறிப்பிட்ட **மதத்தின் தொழுகை கட்டிடத்தை** இடிப்பது என்பது சாதாரண குற்றமல்ல. அதை எப்படியும் இடிக்கப்போகிறார்கள் என்பது அன்றைய **ஆட்சியில் இருந்த** அன்றைய பிரதமர் **நரசிம்மராவ்** அவர்களுக்கும் தெரியும். **நரசிம்மராவ்** அவர்கள் **ராம பக்தன்** ஆகும். ஆனதால் மசூதியை இடிக்க புறப்பட்ட **கரசேவக்** ஆட்களை ஆங்காங்கே தடுத்து நிறுத்தியிருக்கலாம். ஆனால் யாருடனும் அதிகம் பேசாதவரும் – **சிறிக்காதவருமான** பிரதமர் அப்படியே மௌனமானார்.

RSS தலைவர்களில் முக்கிய பெரியதலைகளே கடப்பாறை எடுத்து இடித்து தரைமட்டமாக்கினதை **வீடியோ** படம் எடுத்து அந்த விவகாரம் நீதிமன்றம் சென்று கடைசியாக **உச்ச நீதிமன்றம்** (சுப்ரீம் கோர்ட்) வந்து சேர்ந்தது.

## உச்ச நீதி மன்ற தீர்ப்பு

உச்ச நீதிமன்றம் கூறிய தீர்ப்பை குறித்து **கருத்து கூறக்கூடாது.** நானும் **தீர்ப்பை குறித்து** கருத்து கூற விரும்பவில்லை.

ஆனால் நியாயப்படி முதலாவது **பாபர் மசூதி** இடிக்கப்பட்ட விவகாரத்தில் விசாரனை முடிந்த நிலையில் முதல் வழக்காக பாபர் மசூதி இடிப்புக்கு தீர்ப்பு கூறிவிட்டு அடுத்து **ராமஜென்ம பூமி** பற்றி தீர்ப்பை கூறியிருந்தால் மக்கள் யாவரும் **சந்தேகப்பட** மாட்டார்கள்.

உலக மக்கள் கண்முன்னால் சகல **ஆதாரத்தோடு** ஒரு கோவிலை இடித்தவர்களுக்கு தண்டனை என்ன என்று தீர்ப்பு கூறியிருந்தால் அதிலே **நியாயம்** உண்டு என்று கூறலாம் அது மட்டுமல்ல இதன் தீர்ப்பு ராம ஜென்ம பூமியின் தீர்ப்பையும் மாற்றியிருக்கும் என்று ஓய்வுபெற்ற நீதிபதி அவர்கள் கூறியதாக கேள்விப்பட்டேன்.

## ராம ஜென்ம பூமி தீர்ப்பில் எழும் கேள்வி

மொத்தம் 5 வழக்குகளுக்கு முடிவான தீர்ப்பு கூறப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதில் ஒன்று **சபரிமலைக்கு பெண்கள்** ஆண்களைப்போல தரிசிக்க உரிமை உண்டா? என்பது. அதற்கு கொடுத்த தீர்ப்பு **பெண்கள் போவதற்கு உரிமை உண்டு** அவர்களை தடை செய்யக்கூடாது என்று கூறிவிட்டு, **ஐயப்பன் கோவில் விவகாரம்** அவரவர் **வழிபடும் தெய்வங்களை ஆராதிக்கும் நம்பிக்கை சம்பந்தப்பட்ட விஷயம் ஆகும்.** ஆகவே 7 பேர் கொண்ட குழு அதைக் குறித்து தீர்மானிப்பார்கள் என்று பட்டும்படாமல் தீர்ப்பளித்தால் என்ன அர்த்தம்? என்று விளங்கவில்லை என கேரள அரசாங்க மந்திரி ஒருவர் கூறியதாக செய்தி.

அதே **தெய்வ நம்பிக்கை** சம்பந்தப்பட்ட விஷயத்தின் அடிப்படையில் தானே **பாபரி மசூதி** இடிக்கப்பட்டது. காலத்துக்கு ஏற்ற மாற்றத்தை இந்த விஷயத்திலும் மக்கள் எதிர்பார்ப்பது நியாயம் தானே

**பாபரி மசூதி** இடிப்பு என்று FIRல் பதிவு செய்யப்பட்டுள்ளது. **ராமர் கோவிலை** கட்டியே தீரவேண்டும் என்பது பல ஆண்டுகளுக்கு முன் RSS இயக்கத்தால் தீர்மானிக்கப்பட்ட ஏற்பாடு ஆகும்.

☐ 5 நீதிபதிகள் **ஏகமனதாக** எழுதப்பட்ட தீர்ப்பு என்று கூறப்பட்டது என்றாலும் 5 நீதிபதிகள் தனித்தனியாக எழுதிய தீர்ப்பு எங்கே? இந்த 5 நீதிபதிகளும் வெவ்வேறு வழக்குகளில் வித்தியாசமான தீர்ப்பை அவரவர்கள் பதிவு செய்துள்ளார்கள் என்று கூறப்படுகிறது.

2) அடுத்த நீதிபதி திரு. **பாப்டே** அவர்கள் (இப்போது இவர்தான் தலைமை நீதிபதி). இவர் பக்கா **ராம பக்தரும் – அனுமன் பக்தருமாவார்.** இந்தியாவில் எங்கெல்லாம் அனுமன் விக்கிரகம் உண்டோ அங்கு நேரில் சென்று ஆராதிப்பவர். **நாமக்கல்** அனுமன் கோவிலையும் இவர்விடவில்லை. அங்கும் சென்று பாலாபிஷேகம் நடத்தியதாக கூறுகிறார்கள்.

3) நீதிபதி திரு. **அசோக்பூஷன்** அவர்கள் **அயோத்தி மண்ணின் மைந்தர்.**

4) நீதிபதி திரு. **சந்திர சூட்** அவர்களும்

5) நீதிபதி திரு. திரு. **அப்துல் நசீர்** ஆகிய இவர்கள் இருவரும் **முற்போக்காண சிந்தனை** உள்ளவர்கள். இவர்கள் இருவரின் தீர்ப்புகள் பல வழக்குகளில் அவர்களின் சிந்தனை அடிப்படையில் அமைந்தன.

ஆகவே இந்த 5 நீதிபதிகளும் ராம ஜென்மபூமி வழக்கின் தீர்ப்பு வரை ஒரே மாதிரியான **சிந்தனை உடையவர்கள் அல்ல.** அவரவர்களின் விருப்ப மத நம்பிக்கை வேறு. அவரவர்கள் வணங்கும் தெய்வ நம்பிக்கையும் வேறு. இவர்களும் **மனிதர்களே!** மனித சிந்தனையில், **விருப்பு–வெறுப்பு** உள்ளவர்கள் தான். முதல் மூன்று நீதிபதிகளின் தீர்ப்பு **ஒரே மாதிரியாக இருந்தாலும்,** கடவுள் நம்பிக்கையில் அதிக ஈடுபாடு இல்லாதவர்கள் என்று பலரால் குறிப்படுகிற **மீதி இரண்டு நீதிபதிகளின் தீர்ப்பு** வித்தியாசமாக இருந்திருக்கலாம் என்று சட்ட வல்லுநர்கள் கனிக்கிறார்கள்.

**500 வருடங்களாக** இஸ்லாமிய மக்கள் **ஆராதித்த மசூதி,** வெளிப்படையான ஆதாராமாக வாதித்த வக்கீல்களுக்கு தெரியவில்லை. இந்துமத பூராணத்திலே கணப்படும் இந்துமத மக்களின் **யூகத்தின் அடிப்படையிலும் நம்பிக்கையின் அடிப்படையிலும்** இங்குதான் ராமர் பிறந்தார் என்பதற்கு ஆதாரமற்ற இந்துமத தெய்வ கதைகளின் தவறான வாதத்தை நீதிமன்றத்தில் சமர்பித்த வக்கீல்களின் வாதத்தைக்குறத்து இஸ்லாமியர் மட்டுமல்ல இந்திய பொதுமக்களே இதை குறித்து திருப்தியில்லாத வகையில் பேசிககொள்வதை இந்தியாவின் பெரும்பான்மை நகரங்களில்.ரயில் பிரயானங்களில் கேட்க நேரிட்டதில் நிறைய கேள்விகள் எழுகிறது.

**500 வருடம் மசூதி தெளிவான ஆதாரமா? அல்லது**

ராமர் இங்குதான் பிறந்திருப்பார் என்ற **நம்பிக்கையும், யூகமும்** தெளிவான **ஆதாரமா?** யாருடைய நிர்பந்தங்களாவது தீர்ப்புக்கு பின்னால் இருக்குமா? இந்த சந்தேகம் பலரில் எழ காரணம் தீர்ப்பளித்த நீதிபதி அவர்கள் மிகவும் கண்டிப்பான நீதிபதியாக அறியப்பட்டவர். சில மாதங்களுக்குமுன் ஒரு பெண் கொடுத்த புகார், வழக்கு தொடுத்த அந்த பெண் தீடீரென்று வழக்கை வாபஸ் பெற்றாள். ஏன் வழக்கை வாபஸ் பெற்றாள் என்பதை எந்த மீடியாக்களும் எழுதவில்லையே. ஏன்?

☐ 1985ம் ஆண்டிலிருந்து **ரகுபீர்தாஸ்** என்ற ராம பக்தர் பிரிட்டீஷ் ஆட்சி காலத்தில் ராமர் சிலையை பாபர் மசூதி **அருகே வைத்து** வழிபட்டு கொண்டிருந்தார். ஒருநாள் வலுகட்டாயமாக **பாபர் மசூதிக்குள்ளேயே** நட்ட நடுவில் **ராமர் சிலையை** வைத்து வழிபட்டார் என்பதினால் இந்த ஒரு காரண்ம் ராமர் கோயில் அந்த பூமிக்கடியில் இருந்தது என்று ஆதாரமாக எடுத்துக்கொள்ளலாமா?

☐ இஸ்லாமியரில் **3 வகையினர்** உண்டு. அதில் பெரும்பான்மையான **இரண்டுவகை இஸ்லாமியர்** தீர்ப்பை எதிர்த்து **மறுபரிசீலனை செய்ய** ஏற்பாடு செய்கின்றனர். மேலே எழுதப்பட்ட சந்தேகம், கேள்விபட்டது ஆகியவற்றிக்கான முடிவை கேள்வி? குறியோடு நிருத்தப்படுவதை நிச்சயம் சிலர் விரும்பமாட்டார்கள்.

5 தீர்ப்புகளுமே விசுவின் அரட்டை அரங்க நிகழ்ச்சியில் காணப்படுவதாக தாமஷாக பேசிக்கொள்கின்றனர்.

## RSS ஸின் அடுத்த திட்டம்

**பொது சிவில்** சட்டம் இதை **இந்தியாவில் நிறைவேற்றியே** தீருவோம் என்று வைராக்கியத்தோடு வேலை தொடங்கிவிட்டனர். இனிமேல் **முஸ்லீம் – கிறிஸ்தவர்கள்** பொது சட்டத்துக்கு கட்டுப்பட்டு ஒரே மாதிரி

☐ **ஆயிரக்கணக்கான தெய்வங்களை** வணங்குகிறவர்களை **ஒரே தெய்வத்தை** வணங்க வைக்கும் ஆபத்து நெருங்கிவிட்டது. இது இந்தியாவின் ஒற்றுமைக்கு வழிவபகுக்குமா?

☐ **இந்திய மக்களுக்கு** இருந்த **கடைசி நம்பிக்கை உச்ச நீதி மன்றம்** ஆகும். (சுப்ரீம் கோர்ட்) அதன் மீதுள்ள **நம்பிக்கையை** சமீபத்திய தீர்ப்பு தகர்த்துவிட்டது. RSS. ஜெயித்துவிட்டது.

RSS காவி கட்சி, குறிப்பிட்ட இருவர் நினைத்தால் எப்படிப்பட்ட தீர்ப்பையும் மாற்றி எழுதலாம், தீர்ப்புகள் திருத்தப்படலாம் என்ற நிலை வந்தால்???....

## நீதியுள்ள நியாதிபதி

**இதோ வருகிறார்** உலகத்தை நியாயம் தீர்க்கும் **நீதியுள்ள நியாதிபதி.** அவர் பட்சபாதம் இல்லாதவர். **தவறு** செய்தவர்களை, **பாவம்** செய்தவர்களை **தண்டிப்பதோடு** மட்டுமல்ல. கிறிஸ்தவ வேதத்தில் அன்றைய காலத்தில் **அநியாயமான** தீர்ப்பை வழங்கிய **நியாதிபதிகளை தண்டித்த** அதே தெய்வம் உலகத்தில் **தவறான தீர்ப்பை வழங்கியவர்கள்** யாராயிருந்தாலும் **நீதியுள்ள நியாதிபதி** அவர்களை தண்டிக்காமல் விடமாட்டார்.

அந்த குறிப்பிட்ட **நீதியுள்ள நியாதிபதி** அண்ட சராசரங்களையும் படைத்தவர். அவர் **சர்வஞானி** மனிதருடைய **உள்ளத்தின் எண்ணங்களை** அறிகிறவர்.

அவரின் **நியாசனத்துக்குமுன்** உலகிலுள்ள அனைவரும் நீதிபதிகள் உட்பட நின்றாக வேண்டும்.

அந்த நீதிபதியின் **வருகையின்** தாமதத்துககு காரணம். உலகில் இன்னும் ஒரு **சிலராவது மனந்திரும்ப வேண்டும்** என்ற அளவற்ற **இரக்கமே.** 11 பேது 3:34,9

வாய்மையே வெல்லும் இது அனைத்து நீதி ன்றத்திலும் எழுதி வைக்கப்பட்ட வாசகம் ஆகும்.

## மலேசியா ஊழியங்கள்

2020 வது வருடம் அதாவது அடுத்த மாதம் **ஜனவரி** மாதத்தில் 25, 26ம் தேதிகளில் கர்த்தருக்கு சித்தமானால் என் முதல் கூட்டம் Pinang பினாங் Victory Luthran Churchல் ஆரம்பிக்கும்.

தொடர்பு கொள்ள :

**Rev. Michel John (Victory Luthran Church, 006-012-4671754**

**(PINANG) January. 25, 26 - 2020**

## மலேசியா கோலாலம்பூர் கூட்டங்கள்

2020 பிப்ரவரி 1, 2 தேதிகளில் கோலாலம்பூர் கூட்டத்தில் பேசுே ன்.

தொடர்பு கொள்ள :

**Rev. HENDRY,** (கோலாலம்பூர்) **Mobile : 0060192467226**

# இலங்கையின் ஆட்சி மாற்றம்

இலங்கையிலும் இந்தியாவை போல புதிய ஆட்சி **இரட்டை மிருக** பெலத்தோடு ஆட்சியை பிடித்துள்ளது.

இலங்கை இப்போது **போர் குற்றவாளிகள்** என்று உலக நாடுகளில் உறுதியாக்கப்பட்டவர்களின் கை பிடிக்குள் அகப்பட்டுக்கொண்டது. **லட்சக்கணக்கான** இலங்கை **தமிழர்களையும்** நிராயுதபானி காளாய் நின்ற **போராளிகளையும்** ஒரே நாளில் ஒரே இடத்தில் ஈவு இரக்கமின்றி கொன்று குவிக்க காரணமாக இருந்தவர்களின் **முழு குடும்பமும்** இன்று முழு இலங்கையின் **சர்வ அதிகாரத்தையும்** பெற்று **ஆட்சியில் அமர்ந்திருக்கிறது.**

ஒருவர் இலங்கையின் ஜனாதிபதியாக வேண்டுமானால் அவர் மீது நீதிமன்றத்தில் எந்த வழக்கும் இருக்கக்கூடாது. ஆனால் நூற்றுகனக்கான **கிரிமினல்** வழக்குகளும் **கொலை** வழக்குகளும் நிலுவையில் இருக்கும் ஒரு நபரை மேலும் குறிப்பிட்ட அந்த நபர் இலங்கையை விட்டு வெளி நாடுகளுக்கு வெளியேறக்கூடாது என **பாஸ்போர்ட்டை** அந்த நபரிடமிருந்து பிடுங்கிகொண்டபின் அந்த நபர் இலங்கை **காவல் துறையின்** கண் கானிப்பிலும் **ராணுவத்தினரின்** கண்கானிப்பிலும் இருக்கவேண்டும் .இப்படிப்பட்டவர் தன்மேல் உள்ள வழக்கு அனைத்திலிருந்தும் விடுவிக்கப்படாமல் **அரசாங்க** பதவி எதிலும் சேர்க்கக்கூடாது. இது சுப்ரீம் **கோர்ட் தீர்ப்பாகும்.**

இத்தனை சட்டத்தையும் மீறி சுப்ரீம் கோர்ட் தீர்ப்யைும மதிக்காமல் **ஜனாதிபதி** பதவி ஏற்பை தடைசடட் தீர்ப்பு வழங்கிய சுப்ரீம் கோர்ட் நீதிபதயே குற்றவாளி ஒருவரை கொலையாளி ஒருவரை **ஜனாதிபதியாக** பதவி ஏற்கவைத்தது உலக சரித்திரத்தில் இலங்கை நாட்டில்தான் முதன்முதலாக நடந்திருக்க வேண்டும். ஜனாதிபதி சத்தியபிரமானம் எடுத்து பதவி ஏற்றபின் மறுநாள் அவர் மீதுள்ள சுப்ரீம் கோர்ட் வழக்குகள் யாவும் நீக்கப்படுகின்றன. என்ன ஒரு அராஜகம் இது ஹிட்லர் ஆட்சியில் கூட இப்படி நடந்ததாக சரித்திரம் இல்லையே. சுப்ரீம் கோர்ட் போர் குற்றவாளி ஒருவர் ஆட்சிக்கு வரும் முன்பே அவர் கட்டளையிட்டபடி கீழ்படிகிறதே – இந்தியாவின் தற்போதைய இந்தியாவிலுள்ள நிலைபோல, கட்சியின் பிடிக்குள் **சட்ட அமைப்புகள்** முழுவதும் அடங்கி கிடப்பதுபோல **இலங்கை நிலையும்** அமைந்துள்ளது.

**சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள்** இப்போது **ஜனாதிபதி பாக்கெட்டில்** இப்படிப்பட்ட கொடூரமானவர்கள் கையில் இலங்கை அகப்பட்டுள்ள நிலையில் நம்முடைய பயமெல்லாம் **இலங்கை தமிழர்களின்** நிலை இனி என்ன ஆகும்? ஏற்கனவே **யாழ்பானம்** மற்றும் கிழக்கு பகுதி யாவும் தமிழர்களின் நாடு என்று தமிழ் மக்களே நினைக்காதபடி இருக்க **சிங்கள மக்களின் குடியேற்றம்,** ஆங்காங்கே **புத்தர் சிலையும், புத்த கோவில்களும்** கட்டி வைத்துவிட்டனர். இனி தமிழ்நாடு **தமிழ் இனம்** என்று ஒன்று உண்டு என்று கூறப்படமுடியாத நிலையில் பெரும்பாலான **சிங்களர்களை** குடியேற்றி இந்தியாவின் தற்போதைய நிலைபோல ஒரே மொழி **சிங்களம்** ஒரே நாடு **இலங்கை.** ஒரே இனம் **சிங்கள** இனம். பள்ளி கூடங்களில் மாணவர்களின் **பிரதான மொழி சிங்களமாக** இருக்கும். **மும்மொழி** கொள்ளை மாறி **சிங்களம் – ஆங்கிலம்** என்ற இருமொழி கொள்கை கொண்டுவந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வெளி நாடுகளில் குடியேறி வசதியாக இருக்கும் தமிழர்கள் தன் குடும்பத்துக்காக தன் இன மக்களின் பல **சமூக சேவைகளுக்காக** அனுப்பப்படும் பணம் புதிய அரவாங்கத்தால் கண்கானிக்கப் படும்.

தமிழர்களை பார்க்க வரும் **வெளிநாட்டவர்** அல்லது **கிறிஸ்தவ கூட்டங்கள்** நடத்த வரும் **ஊழியர்களும்** குறிப்பாக **இந்தியர்கள்** மிகவும் கண்கானிக்கப்படுவார்கள்.

**பழைய செக்போஸ்ட்** தமிழர்கள் வாழும் **மாநிலங்களில்** ஸ்திரமாக்கப்படும். **தமிழர்களின் சுதந்திரம்** இப்போது கேள்விகுறியாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் **யாழ்பானத்தில்** வாழும் தமிழர்கள் மட்டுமல்ல **கொளும்பு** போன்று மற்ற பாகங்களில் வாழும் **தமிழர்களின்** நிலை பாதுகாப்புகளை குறித்து என் மனம் மிகவும் வேதனையடைகிறது. முன்பைவிட இன்னும் கூடுதலாக இலங்கை **தமிழர்களுக்காக** ஜெபிப்பேன். ஜாமக்காரன் வாசகர்களும் என்னோடு இணைந்து ஜெபியுங்கள்.

இலங்கை வாழ் மக்களாகிய **சிங்களர் – தமிழர்களுக்கு** கிறிஸ்துவின் சமாதானம் உண்டாவதாக

ஜாமக்காரன் வாசகர் குடும்பங்கள் அனைவருக்கும்

எங்களது மனமார்ந்த

# கிறிஸ்மஸ் & புத்தாண்டு
# நல்வாழ்த்துக்கள்

– டாக்டர் **புஷ்பராஜ் & குடும்பத்தினர்**

!

**DECEMBER - 2019**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription :**

**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.